# ஆர்க்காடும் அகழ்வைப்பகமும்

ஆசிரியர்

து. துளசிராமன், எம்.ஏ.,
காப்பாட்சியர்

பதிப்பாசிரியர்

கு. தாமோதரன், எம்.ஏ.,
துணை இயக்குநர்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-600 028

1989

முதற் பதிப்பு—1989 ( 1000 பிரதிகள் )
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 103

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# ஆர்க்காடும் அகழ்வைப்பகமும்

ஆசிரியர்
**து. துளசிராமன்**, எம்.ஏ.

LIBRARY
MADRAS-28.

பதிப்பாசிரியர்
**கு. தாமோதரன்**, எம்.ஏ.

விலை: ரூ.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# உள்ளடக்கம்


பக்கம்

பதிப்புரை

1 ஆர்க்காட்டின் வரலாறு ... 1

2 நவாபுகள் கால ஆட்சி முறையும், சமுதாய நிலையும் ... 17

3 இசுலாமியக் கட்டடக் கலை ... 25

4 இசுலாமியர் காசுகள் ... 39

5 இசுலாமியரின் தமிழ் இலக்கியத் தொண்டு ... 45

6 அகழ்வைப்பகம் ... 53

7 இணைப்புச் செய்திகள் ... 65

8 படங்கள் ... 73

# பதிப்பாசிரியர் உரை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப் பாட்டின்கீழ், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 15 அகழ்வைப்பகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வகழ்வைப்பகங்கள் அந்தந்தப் பகுதியின் வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் பயனடைகின்றனர். இந்த அகழ்வைப்பகங்களைப் பார்வையிட வருகின்ற மக்களுக்கு, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்களைப் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் சிறிய அளவில் கையேடுகள் இத்துறையால் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதுவரை இத்துறையில் இராசராசன் அகழ்வைப்பகக் கையேடு, இராமநாதபுரம் அகழ்வைப்பகக் கையேடு ஆகியவை சிறிய அளவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்ந்து இப்பொழுது ஆர்க்காடு அகழ்வைப்பகக் கையேடு விரிவான முறையில் வெளி யிடப்படுகிறது.

இப்புத்தகத்தின் இறுதிப் பகுதி ஆர்க்காட்டில் அமைந்துள்ள அகழ்வைப்பகத்தில் காணப்பெறும் பல்வேறு தொல்பொருள் களைப் பற்றி விளக்கம் கூறுவதாக அமைந்துள்ளது. சிற்பங்கள், சுடுமண் பாவைகள், மரச் சிற்பங்கள், இரும்புப் பொருட்கள், பீங்கான் கலன்கள், காசுகள், மதுப் புட்டிகள் மற்றும் பிற பொருள் களும் இவ்வகழ்வைப்பகத்திற்கு அழகூட்டுகின்றன.

இந்நூல் அளவில் சிறிதாகக் காணப்பட்டாலும் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய ஒரு நூலாக விளங்குகிறது. இந்நூல் ஆசிரியர் திரு. துளசிராமனுக்கு என்னுடைய பாராட்டு தலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற நூல்களை மிகவும் நல்ல முறையில் மிகக் குறுகிய காலத்தில் வெளியிடுவதற்கு உதவிய இத்துறை அச்சுப் பிரிவு அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கு. தாமோதரன்,
துணை இயக்குநர்.

# ஆர்க்காட்டின் வரலாறு

'மிராசுரிமை' என்ற நூலில் இந்நகரம் பிற்காலத்தில் தோன்றியது தான் என வாதிடுகிறார்.

## சங்க இலக்கியத்தில் ஆர்க்காடு

நமது சங்க இலக்கியங்களை ஆராயும்போது ஆர்க்காடு ஒரு தொன்மையான நகரமாக விளங்கியது எனத் தெரிகிறது. கீழ்க்காணும் நற்றிணைப் பாடல் ஒன்று,

..................................."மேவார்
ஆர் அரண் கடந்த மாரி வண் மகிழ்த்
திதலை எஃகின் சேந்தன் தந்தை,
தேங் கமழ் விரி தார் இயல் தேர் அழிசி,
வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியல் அம் கழனி ஆர்க்காடு"

— (பாடல் எண் : 190 )

என ஆர்க்காட்டைக் குறிப்பிடுகிறது. மற்றொரு பாடல்;

"படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடி நுடங்கு மறுகின் ஆர்க்காடு"

— (பாடல் எண் : 227 )

எனக் குறிக்கிறது. மேற்கூறிய இரு பாடல்களிலிருந்தும் ஆர்க்காட்டின் வளத்தையும், அதன் தலைவன் அழிசியின் சிறப்பையும் நம்மால் அறிய முடிகிறது. மேலும் ஆர்க்காடு சோழ நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது எனவும் தெரிகிறது.

குறுந்தொகையில் பரணரும் ஆர்க்காட்டைக் கூறுகிறார்.

................................"காவிரிப்
பலர் ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை,
அரியல்அம் புகவின்அம் கோட்டு வேட்டை
நிரைய ஒள் வாள் இளையர் பெருமகன்,
அழிசி ஆர்க்காடு"

( பாடல் எண் : 258 )

இவ்வாறு சங்க இலக்கியப் புலவர்களான தேவனார், நக்கண்ணையார், பரணர் போன்றோர் சிறப்பித்துக் கூறும் ஆர்க்காடு நகரத்தைச் சங்க காலத்தில் அழிசியும் அவன் மகன் சேந்தனும் ஆட்சி புரிந்துள்ளனர் எனத் தெளிவாகத் தெரிகிறது.

சோழ நாட்டின் வட பகுதியில் குறிப்பிடத்தக்க ஒரு நகரமாக ஆர்க்காடு சிறப்புப் பெற்றிருந்தது என்பது உரை வேந்தர் அவ்வை துரைசாமிப்பிள்ளை அவர்களின் கணிப்பாகும்.

மேலும் "ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்" என்பவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவராகக் குறிக்கப்படுகிறார். இவர் இந்த ஆர்க்காட்டைச் சேர்ந்தவராகவே இருத்தல் வேண்டும். ஏனெனில் சங்ககாலப் புலவர்கள் பெரும் பாலும் தமது பெயருடன் தமது ஊர்ப் பெயரையும் சேர்த்துக் கொள்வது மரபு.

கி.பி. 60-80 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட "பெரிபுளஸ்" என்ற கிரேக்க நூலில் ஆர்க்காடு என்றொரு உள்நாட்டு ஊர் குறிக்கப்பட்டுள்ளது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நூலாசிரியர் தாலமியும் ஆர்க்காட்டை "ஆர்க்கபோஸ்" எனக் குறிக்கிறார்.

மேற்கண்ட சான்றுகள் மூலம் ஆர்க்காடு இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த நகரமாகத் திகழ்ந்துள்ளது எனத் தெரிகிறது.

## பல்லவர், சோழர் காலங்களில் ஆர்க்காடு

சங்ககாலத்திற்குப் பிறகு பல்லவர், சோழர், விஜயநகர ஆட்சிக் காலத்தில் ஆர்க்காடு தன் சிறப்பை இழந்து ஒரு கூற்றமாக (தற்போதைய வட்டம்) இருந்துள்ளது. பின்னர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் ஆர்க்காடு நவாபுகளின் தலைநகரமாகத் திகழ்ந்தது.

சங்ககாலத்தில் ஆர்க்காடு என்று அழைக்கப்பட்ட இவ்வூர் இராசேந்திர சோழன் காலத்தில் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) 'திருவழுத்தூர்' என வழங்கப்பட்டது. திருவண்ணாமலையில் உள்ள

விஜயநகர மன்னன் வீர சதாசிவ மகாராயர் கல்வெட்டு (கி.பி. 1528) இவ்வூரை 'இராஜநாராயணபுரமான ஆர்க்காடு' என்று குறிக்கிறது. இராஜநாராயணன் என்ற சம்புவராய மன்னன் பெயரால் இராஜ நாராயணபுரம் என்று ஏற்பட்டிருக்கலாம். மேலும் 'புரம்' என்று முடிவதால் இது ஒரு நகரமாக விளங்கியிருக்கலாம்.

### நவாபுகள் காலத்தில்

நவாபுகள் ஆர்க்காட்டை 'முகமதுபூர்' என்றும் 'தர்-அல்னூர்' என்றும் அழைத்தனர். நவாபுகள் காலத்தில் வடக்கே ஆந்திரத்தில் உள்ள பலநாடும், தெற்கே கன்னியாகுமரியும், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்கே கடலும் கருநாடகத்தின் எல்லை களாகும். கி.பி. 1698 முதல் 1855 வரை சுமார் 150 ஆண்டுகளுக்கு மேல் நவாபுகள் கருநாடகத்தை ஆட்சி செய்தார்கள்.

### சுல்பிகர்கான் (கி.பி. 1690-1703)

கி.பி. 1698-இல் சுல்பிகர்கான் என்னும் படைத் தலைவனை முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் கருநாடகத்தின் முதல் நவாபாக நியமித்தார். இவர் காலத்தில்தான் ஆர்க்காடு கர்நாடகத்தின் தலை நகராகியது. இவர் தாம் கைப்பற்றிய புனித தாவிது கோட்டையை ஆங்கிலேயர்களிடமிருந்து 40,000 பகோடாக்களைப் பெற்றுக் கொண்டு திரும்பக் கொடுத்தார். இவர்தான் ஆர்க்காட்டில் முதன் முதலாக நிர்வாக அலுவலகங்கள் கட்ட ஆரம்பித்தார்.

### தாவூத்கான் (கி.பி. 1703-1710)

சுல்பிகர்கானுக்குப் பிறகு கி.பி 1703-ஆம் ஆண்டு தாவூத்கான் ஆர்க்காட்டின் நவாபானார். இவர் 1703, 1706, 1708 ஆகிய ஆண்டுகளில் சென்னைக்கு ஆங்கிலேயர்களின் விருந்தினராக வருகை புரிந்தார். இவர் ஆங்கிலேயர்களிடமிருந்து மிகுதியாகப் பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு, ஆங்கிலேயர், தம் ஆட்சிக்குட் பட்ட பகுதிகளில் வாணிபம் செய்யச் சலுகைகள் வழங்கினார். இவர் காலத்தில்தான் ஆர்க்காட்டில் 'ஆலம்பானா' கோட்டை எழுப்பப் பட்டது. கி.பி. 1705-இல் தாவூத்கான் முகலாயப் பேரரசன் ஔரங்கசீப்பை ஔரங்காபாத்தில் சந்தித்துத் தமக்கு அதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டார். இவர் நேர்மையுடனும், நீதியுடனும் ஆட்சி புரிந்தார். தவறு செய்தவர்களைக் கடுமையாகத் தண்டித்தார். இவர் இரண்டு நாய்களை வளர்த்து வந்தார்;

எவரேனும் தவறு செய்தவர்களை இவர்முன் கொண்டுவந்து நிறுத்தினால், அவர்கள் மீது இந்நாய்களை ஏவி விடுவார். கடல் பயணத்தை இவர் மிகவும் விரும்பினார். இதன்பொருட்டுச் செல்லைக்குத் தெற்கே கடற்கரை ஓரத்தில் ஓர் அழகிய மாளிகையை எழுப்பி, அதில் அடிக்கடி தங்குவார். தில்லி பேரரசர் ப்ருக் ஷயர் தன் தம்பி உசேன் அலியைத் தக்காண சுபேதாராக நியமித்து அனுப்பினார். அதே சமயம் தன் தம்பியை வழியில் தடுத்து நிறுத்திப் போரிட்டுத் தோற்கடிக்குமாறு நவாப் தாவூத்கானுக்கும் இரகசியச் செய்தி ஒன்றை அனுப்பினார் ஆந்திராவிலுள்ள பர்ஹான்பூர் என்னுமிடத்தில் உசேன் அலியுடன் நடைபெற்ற போரில் தாவூத்கான் மரணமடைந்தார்.

## சாதத்துல்லாகான் (கி.பி. 1710-1732)

இவர் கி.பி. 1650-இல் இசுலாமிய நவாயத் மரபில் தோன்றியவர். இவருடைய இயற்பெயர் முகமது சையத் என்பதாகும். இவரைப் பற்றி அறிவதற்கு "சையத் நாமா" "திவானி-அமீன்" மற்றும் "குல்சன்-இ-சாதத்" போன்ற நூல்கள் பெருந்துணை புரிகின்றன. முதலில் ஔரங்கசீப்பின் படையில் சேர்ந்த இவர் பின்னர் வட இந்தியாவில் பிராரிலுள்ள ராம்கட்டின் பௌசுதாராக நியமிக்கப் பட்டார். இவருடைய திறமையை அறிந்த பேரரசர் இவரை ஆர்க்காட்டு நவாப் தாவூத்கானின் திவானாக நியமித்தார். இவர் தஞ்சை, திருச்சிப் பகுதிகளிலுள்ள பாளையக்காரர்களிடமிருந்து வரி வசூல் செய்யும் பணியைத் திறம்பட முடித்தார். கி.பி. 1700-இல் வேலூர்க் கோட்டையை முற்றுகையிட்டு மராட்டிய மன்னன் இராஜாராமின் படைத் தலைவன் சங்கர் மல்ஹர் என்பவனைத் தோற்கடித்தார். பின்னர் வேலூர்க் கோட்டைக்குத் தம் சகோதரர் குலாம் அலியை ஆளுநராக்கினார். இவர் தொடர்ந்து திமிரி, ஆரணி, பள்ளிகொண்டா ஆகிய இடங்களில் பாளையக்காரர்களுடன் நடத்திய போர்களில் வெற்றிவாகை சூடியதால், பேரரசர் ஔரங்கசீப் இவருக்கு **சாதத்துல்லாகான், கிபாயத்கான்** என்னும் பட்டப் பெயர்களை வழங்கினார். கி.பி. 1710-இல் தாவூத்கானுக்குப் பிறகு இவர் ஆர்க்காட்டின் நவாபானார். சாதத்துல்லாகான் ஹைதராபாத் சுபேதார் நிஜாம்-உல்-முல்குடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். இவர்தான் கருநாடகத்தின் உண்மையான முதல் நவாப் எனலாம். இவருடைய 22 ஆண்டு ஆட்சிக் காலத்தில் பெரும்

போர்களில் பங்குகொண்டார். அவற்றுள் முக்கியமானது செஞ்சி மன்னன் தேசிங்குராஜனுடன் நடைபெற்ற போராகும். சாதத்துல்லா கான் தேசிங்குராஜன் மீதும் அவனுடைய வீரத்தின் மீதும் பேரன்பு கொண்டிருந்தார். தேசிங்கு வரி கொடுக்க மறுத்ததாலேயே இப்போரை இவர் மேற்கொண்டார். கி.பி. 1714-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மூன்றாம் தேதி செஞ்சிக்கு அருகிலுள்ள தேவனூர் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் தேசிங்கு வீர மரணமடைந்தான். அவனுடைய மனைவி உடன்கட்டை ஏறினாள். அவளுடைய கற்பின் உறுதியைக் கண்டு சாதத்துல்லாகான், அவள் நினைவாக ஆர்க்காட்டிற்கு அருகில் "இராணிப்பேட்டை" என்னும் ஊரை ஏற்படுத்தினார்.

இவர் ஆர்க்காடு ஆலம்பானாக் கோட்டையை மேலும் விரிவு படுத்தி வலிவுள்ளதாக்கினார். தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் பாளையக்காரர்களுடனும், மைசூர் மன்னர்களுடனும், சென்னை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியாருடனும் பல போர்களில் ஈடுபட்டு வெற்றிபெற்றார். கி.பி. 1732-இல் மரணமடைந்தார்.

## தோஸ்த் அலிகான் (கி.பி. 1732—1740)

சாதத்துல்லாகானுக்குப் பிள்ளைகள் இல்லாததால், அவருடைய அண்ணன் குலாம்அலியின் மகன் தோஸ்பு அலிகான் நவாப் பட்டம் ஏற்றார். இவர் பெயருக்கு மட்டுமே நவாபாகத் திகழ்ந்தார். இவருடைய மகன் சப்தர்அலியும், மருமகன் சந்தாசாகிப்பும்தான் கருநாடகத்தின் உண்மையான ஆட்சியாளர்களாக விளங்கினர். கி.பி. 1732-இல் இவர்கள் மதுரை நாயக்கர் மீது படையெடுத்தனர். மதுரை நாயக்கன் விஜயரங்க சொக்கநாதனுக்குப் பிள்ளைகள் இல்லாததால், அவன் மனைவி மீனாட்சியே ஆட்சிப்பொறுப்பேற்றாள். திருமலை நாயக்கனின் தம்பி குமாரமுத்து வழிவந்த விஜைய குமார முத்துத் திருமலை என்பவனைத் தத்து எடுத்துக்கொண்டு, அவன் சார்பில் மீனாட்சி ஆட்சிபுரியத் தொடங்கினாள். தளவாய் நாராயணப்பாவின் தூண்டுதலின்பேரில் விஜயகுமாரனின் தந்தை பங்காருதிருமலை ஆட்சியைக் கைப்பற்றக் கிளர்ச்சி செய்தான். இதனால் இவன் நாடு கடத்தப்பட்டான். இச்சமயத்தில் சப்தர்அலியும், சந்தாசாகிப்பும் திறை வசூல் செய்யும்பொருட்டுத் தஞ்சைக்கும், மதுரைக்கும் படையெடுத்தனர். பங்காருதிருமலை இவ்விருவருக்கும் முப்பது லட்சம் ரூபாய் கொடுத்துத் தமக்கு உதவும்படி கேட்டார்.

சப்தர்அலி பங்காருதிருமலைக்கு உதவுவதாகக் கூறி அதற்கான காரியங்களில் ஈடுபட்டார். இப்போது மீனாட்சி ஒரு கோடி வெள்ளி தருவதாகக் கூறிச் சந்தாசாகிப்பின் உதவியைக் கோரினாள். சந்தாசாகிப் குரானின் மீது பொய் சத்தியம் செய்து மீனாட்சியை ஏமாற்றினான். அம்மையநாயக்கனூரில் நடைபெற்ற போரில் சந்தாசாகிப் பங்காருவைத் தோற்கடித்ததோடு, மீனாட்சியையும் சிறையிலடைத்தான். மீனாட்சி சிறையில் நஞ்சுண்டு உயிர் நீத்தாள். கி.பி. 1740-இல் ராகோஜிபோன்ஸ்லே என்பவரின் தலைமையில் மராட்டியர்கள் தமிழகத்தின் மீது படையெடுத்தனர். நவாப் தோஸ்த் அலிகான் தம்மிடமிருந்த சிறிய படையுடன் மராட்டியப் படைகளை எதிர்த்தார். போரில் நவாப் மரணமடைந்தார். தோஸ்த்அலியின் மகன் சப்தர்அலியை மராட்டியர்கள் நவாபாக ஏற்றுக்கொண்டு, அவன் மைத்துனனான சந்தாசாகிப்பை திருச்சிக்கருகில் கொடுதலம் என்னும் இடத்தில் தோற்கடித்துச் சிறைப்படுத்தி மஹாராஷ்டிரத்திலுள்ள 'சதாரா' என்னும் கோட்டையில் சிறை வைத்தனர்.

## சப்தர் அலி (கி.பி. 1740-1742)

தாமல்செருவு போரில் தோஸ்த் அலிகான் இறந்ததும், அவர் மகன் சப்தர் அலிகான் மராட்டியர்களுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு ஆர்க்காட்டின் நவாபாகப் பட்டமேற்றார். இதற்காக மராட்டியருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்க வேண்டியதாயிற்று. இதனால் இவர் தம் கட்டுப்பாட்டில் உள்ள பிற ஆளுநர்களிடமிருந்து அதிக அளவில் பணம் வசூலித்தார். இவர் சகோதரியின் கணவர் முர்தூஷா அலி வேலூர் கோட்டையின் ஜாகீர் உரிமையைத் தமக்கு ஓராண்டு காலத்திற்கு வழங்குமாறும், பின்னர் அவ்வுரிமையை அதற்குரியவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும் வேண்டினார். சப்தர் அலி தம் சகோதரியின் பொருட்டு இதற்கு இசைந்தார் ஓராண்டுக்குப் பின், தம் ஜாகீரை திரும்பப் பெற்றுவிடுவாரோ என அஞ்சிய முர்தூஷா அலி, நவாப் சப்தர் அலியைத் தந்திரமாகத் தம் மாளிகைக்கு அழைத்து, அவர் தூங்கும்போது குத்திக் கொலை செய்தார். பின்னர் முர்தூஷா அலி தம்மையே நவாபாக அறிவித்துக் கொண்டார். இதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இதனைக் கேள்வியுற்ற ஹைதராபாத் நிஜாம்-உல்-முல்க் தம் படையுடன் ஆர்க்காடு வந்து

சேர்ந்தார். முர்தூஷா அலியைக் கைது செய்து காவலில் வைத்தார். சப்தர் அலியின் மகன் முகமது சையத் சிறுவனாக இருந்ததால் அன்வருதீன்கானை மேற்பார்வையாளராக நியமித்து, கருநாடக ஆட்சியைக் கவனிக்குமாறு கட்டளையிட்டார். இதற்கிடையில் முர்தூஷா அலி சதித் திட்டம் ஒன்றைத் தீட்டி சிறுவன் முகமது சையத்தை கொன்றுவிட்டார். இத்துடன் நவாயத் குடும்பத்தின் ஆட்சி கருநாடகத்தில் முடிந்தது.

**அன்வருதீன்கான் (கி.பி. 1744-1749)**

அன்வருதீன் முதலில் முகலாயப் பேரரசர் முகமது ஷாவின் படையில் துணை வசீராகப் பணிபுரிந்து, சிராஜ்-உத்-தௌலா என்னும் பட்டப்பெயரைப் பெற்றார். பின்னர் ஹைதராபாத் நிஜாம் உல்-முல்க் இவரை இராஜமகேந்திரம், மசூலிப்பட்டினம் ஆகியவற்றின் நவாபாக நியமித்தார். இவர் நிஜாமின் கீழ் பல போர்களில் ஈடுபட்டுத் தன் திறமையை வெளிப்படுத்தியதன் காரணமாக, இறுதியில் கி.பி. 1744-இல் ஆர்க்காட்டு நவாபாக நியமனம் செய்யப்பட்டார். இவர்தான் வாலாஜாஹி குடும்பத்தின் முதல் ஆர்க்காட்டு நவாபாவார்.

அன்வருதீன் தன் மகன் மாபூஸ்கானைத் துணை நவாபாக்கிக் காஞ்சிபுரத்தின் நிர்வாகத்தைக் கவனிக்க நியமித்தார். மற்றொரு மகன் முகமதலிகானைத் திருவதிகை மற்றும் புவனகிரியின் கவர்னராக்கினார். இராஜா சம்பத்ராய் என்பவர் இவரின் திவானாகச் செயல்பட்டார். அன்வருதீன் 1744-இல் மாபூஸ்கான் தலைமையில் ஒரு படையைத் தமிழகத்தில் இருந்த மறவர்களையும், பாளையக்காரர்களையும் அடக்கித் திறைப்பணம் வசூலிக்க அனுப்பினார். மாபூஸ்கான் இதில் திறமையாகச் செயல்படவில்லை. ஆனால் முகமதலி முதலில் மதுரையை வென்று பின் திருநெல்வேலி வரை படையெடுத்துச் சென்று பல பாளையக்காரர்களை வெற்றிகொண்டு, கிட்டதட்ட எழுபது மண் கோட்டைகளைத் தரைமட்டமாக்கினார். எனினும் இதன்மூலம் திறைப்பணம் பெற எவ்விதமான உடன்பாடும் ஏற்படவில்லை. முகமதலி, இராமநாதபுரம் முத்துக்குமார இரகுநாத சேதுபதிக்கு ஆதரவாக, தஞ்சை மன்னன் பிரதாப்சிங்கை வென்று அடக்கினார். இதற்கீடாக நவாப் கோயிலடி, இளங்காடு ஆகிய இடங்களைப் பெற்றார். இச்சமயத்தில் ஹைதராபாத் நிஜாம்-உல்-முல்க் (1748-இல்) இறந்துவிடுகிறார்.

நிஜாம் உல்-முல்க்கின் மகன் நசீர்ஜங் 1741-இல் தன் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்திருந்தான். அச்சமயம் நிஜாமின் மருமகனான மேலோர் மாகாணத் தலைவன் முதவாசில்கான் அவனுக்குப் பேருதவி செய்திருந்தான். இதற்குக் கைமாறாகக் கருநாடக நவாப் ஆட்சிப் பதவியைத் தனக்கு அளிப்பதாக நிஜாம் வாக்களித்திருந்தார் என்று முதவாசில்கான் உரிமை கொண்டாடினான். இதற்காக இவன் தன் மகன் முசபர்ஜங் தலைமையில் ஒரு பெரும் படையைக் கருநாடக நவாபைத் தோற்கடிப்பதற்காக அனுப்பினான். சதாரா சிறையிலிருந்து விடுதலை பெற்ற சந்தா சாகிப்பும் முசபர்ஜங்குக்குத் துணையாக வந்தான்.

சந்தாசாகிப்பின் புதல்வன் ரஜ்ஸா அலி இச்சமயம் பிரெஞ்சு கவர்னர் டூப்ளேயின் நண்பனாகப் பாண்டிச்சேரியில் தங்கியிருந்தான். டூப்ளேயிடமிருந்து ஒரு பிரெஞ்சுப் படையின் உதவியைப் பெற்று, அப்படையுடன் அவன் தந்தையிடம் வந்து சேர்ந்தான்.

எழுபத்தேழு வயதான கர்நாடக நவாப் அன்வருதீன் இச்செய்திகளைக் கேட்டுப் பரபரப்படைந்தான். அச்சமயம் அவன் தமிழகத்தின் தென் பகுதியில் தங்கியிருந்தான். உடனே படைகளைத் திரட்டிக்கொண்டு வடதிசை நோக்கி முன்னேறினான். மூத்த மகன் மாபூஸ்கானைத் தலைநகரிலேயே இருந்து நகரைக் காக்கும்படியும், இளையமகன் முகமதலியைத் தக்க படைகளைத் திரட்டிக்கொண்டு தம்முடன் வந்து சேரும்படியும் கட்டளையிட்டான்.

ஆம்பூர் அருகே 1749-இல் நடைபெற்ற போரில் மூதரசன் அன்வருதீன் மாண்டான். அவன் மூத்த மகன் மாபூஸ்கான் ஆர்க்காட்டை விட்டு ஓடி ஹைதராபாத்தில் சென்று தஞ்சமடைந்தான். இளைய மகன் முகமதலி ஆங்கிலப் படையின் உதவி பெற்றுத் திருச்சிக்குச் சென்றான்.

## முகமதலி (கி.பி. 1749-1795)

ஆம்பூர் போருக்குப்பின், முகமதலி திருச்சியில் நவாபாக முடிசூட்டிக் கொண்டார். திருச்சியைத் தவிர மற்ற கருநாடகப் பகுதிகள்

யாவும் முசபர்ஜங், சந்தாசாகிப் வசமாயின. இந்நிலையில் சந்தா சாகிப்பிற்கு பிரெஞ்சுக்காரர்களும், முகமதலிக்கு ஆங்கிலேயர்களும் துணை நின்றனர்.

இதனிடையில், நிஜாம் உல்-முல்க் இறந்த செய்தி கேட்டு அவன் மகன் நசீர்ஜங் ஹைதராபாத் அடைந்து நிஜாமாகப் பதவி ஏற்றான். பின் முசபர்ஜங், சந்தாசாகிப், பிரெஞ்சு கவர்னர் டூப்ளே ஆகியோர் தமிழகத்தில் பெற்ற வெற்றிகள் குறித்தும், முசபர்ஜங் நிஜாமாக பதவி பெறச் செய்யும் முயற்சிகள் குறித்தும் அறிந்து நசீர்ஜங் ஒரு பெரும் படையுடன் தமிழகம் நோக்கி வந்தான், நசீர்ஜங் செங்கம் கணவாயில் முகாமிட்டிருந்த நேரம், முசபர்ஜங் மனம் மாறி அவனிடம் சரணடைந்தான். இதை அறிந்த பின்பும் டூப்ளே பெரும் படையுடன் நசீர்ஜங்கை எதிர்க்க முனைந்தான். இதற்கு ஆரம்பமாகப் பிரெஞ்சுப் படைத் தலைவர் புஸ்ஸீ செஞ்சிக் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றினான். கி.பி. 1750-ல் திருவதிகையில் நடைபெற்ற போரில் பிரெஞ்சுப் படை முகமதலியையும், ஆங்கிலேயர்களையும் முறியடித்தது. பின்னர் இதே ஆண்டில் யுத்தனேந்தல் என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் பிரெஞ்சுப் படைகள் முகமதலி, ஆங்கிலேயர் மற்றும் நசீர்ஜங் ஆகியோரின் படைகளை ஒருங்கே தாக்கி வெற்றி கண்டது. இப்போரில் நிஜாம் நசீர்ஜங் மரணமடைந்தான். முகமதலி தலைமறைவாகத் தேசூர், பெண்ணாத்தூர் வழியாகத் திருச்சி அடைந்தான். இருப்பினும் பிரெஞ்சுப் படைகளும், சந்தாசாகிப்பும் முகமதலிக்கு முடிவுகட்டத் திருச்சியை முற்றுகையிட்டனர். இந்நிலையில் ஆங்கிலேயப் படைத் தலைவன் இராபர்ட் கிளைவ் முகமதலிக்கு உதவச் சிறந்த வழி ஆர்க்காட்டை முற்றுகையிடுவதுதான் எனத் தீர்மானித்து அதை செயல்படுத்தத் தொடங்கினான்.

## கிளைவின் ஆர்க்காட்டு முற்றுகை (1751)

முகமதலியின் சார்பாக கிளைவ் 500 ஆங்கிலேய வீரர்களுடனும், 300 சிப்பாய்களுடனும் ஆர்க்காடு நோக்கி விரைந்தான். இதில் 8 பேர்கள் மட்டுமே ஆங்கிலேயத் தலைவர்கள். அதிலும் 6 பேர்கள் அதுவரை போரையே பார்க்காதவர்கள். கி.பி. 1751-ஆம் ஆண்டு ஆகஸ்டு 26-ந்தேதி கிளைவின் படை காஞ்சியை விட்டுக் கிளம்பியவுடன் பேய்க்காற்றும் பேய் மழையும் அப்படையைத் தாக்கியது.

அப்போதும் ஆங்கிலேயப் படை சந்தாசாகிப்பின் ஆர்க்காட்டுக் கோட்டையை நோக்கி அஞ்சாது முன்னேறியது. அதைக் கண்ணுற்ற ஆர்க்காட்டுச் சிப்பாய்கள் கோட்டையை விட்டுத் தானாக அகன்றனர். கிளைவ் எதிர்ப்பேதும் இல்லாமலேயே ஆர்க்காட்டைப் பிடித்தார். கோட்டைக்குள்ளே உணவுப் பஞ்சம். இந்தியச் சிப்பாய்கள் தங்கள் கூழையும், கஞ்சியையும் ஆங்கிலேயருக்கு அளித்து விட்டு நீராகாரத்தையே பருகி வந்தனர். ஒரு இந்திய சிப்பாய்க்கு குண்டடிபட்டதைப் பார்த்து 40 பீரங்கிகளுக்கெதிரில் துணிந்து குதித்து அவனைத் தூக்கி ஓடி வந்து விட்டான் ஒரு ஆங்கிலேய வீரன். ஊரைச் சுற்றிலும் சந்தாசாகிப்பின் துருப்புகள் ஆங்கிலேயர்களைப் பயமுறுத்திக்கொண்டிருந்தன. இதற்கிடையில் காவேரிப்பாக்கம் வழியாக ஓர் ஆங்கிலேயப் படை ஆர்க்காட்டை நோக்கி விரைந்து வந்தது. நேரமோ கதிரவன் மறைந்துகொண்டிருக்கும் நேரம். ஆங்கிலேயர்களின் கடும் தாக்கு தலை தாங்கமாட்டாமல் நவாபின் வீரர்கள் சிதறி ஓடினார்கள். முழுநிலவு தெருவெங்கும் தன்னொளி பரப்பிய வெளிச்சத்தில் ஆங்கிலேயர்கள் சந்தாசாகிப்பின் வீரர்களை ஆர்க்காட்டுத் தெருக்களில் விரட்டி அடித்தார்கள். இறுதியில் 53 நாட்கள் முற்றுகைக்குப் பிறகு ஆர்க்காடு ஆங்கிலேயர் வசமாயிற்று. முகமதலியின் கொடி ஆர்க்காட்டுக் கோட்டையில் ஏறியது. சுமார் 60 மைல் பரப்பிற்கு ஆங்கிலேயரின் ஆதிக்கம் பரவியது. வடக்கே நெல்லூர் வரை பிடிபட்டது. திருப்பதி கோயில் உண்டி சுமார் 4,00,000 பகோடாக்களுடன் ஆங்கிலேயர் வசமானது. நிலவில் நிறுவிய இவ்வெற்றி ஆங்கில ஆட்சிக்கு இந்தியாவில் வித்திட்டது.

ஆர்க்காடு வெற்றியைத் தொடர்ந்து கிளைவும், லாரன்சும் திருச்சிக்கு விரைந்து முகமதலிக்குப் படையையும், உணவையும் அளித்து, சந்தாசாகிப்பின் திருச்சி முற்றுகையை மிக எளிதில் உடைத்தனர். இறுதியில் முகமதலியின் ஆதரவாளனாகச் செயலாற்றிய தஞ்சை அரசன் மானாஜிராவ், சந்தாசாகிப்பை சிறைபிடித்துக் கொலை செய்தான்.

பின்னர் கருநாடகம் முழுவதையும் முகமதலி ஆங்கிலேயர்களின் துணைகொண்டு ஆட்சி புரிந்தார். இவர்தம் ஆட்சிக்குட்பட்டிருந்த மதுரையிலும், திருநெல்வேலியிலும் வரி வசூலிக்கவும், நாட்டின்

நிர்வாகத்தைக் கவனிக்கவும் பாபஸ்கான் என்பவரை நியமித்தார். அவரது நிர்வாகம் மன நிறைவைத் தராததால் யூசுப்கான் என்னும் போர் வீரரை நியமித்தார். இவரும் கீழ்ப்படிந்து ஒழுங்காக நடக்க வில்லை. எனவே, கி.பி. 1763 இல் ஆங்கிலப் படை உதவியுடன் நவாப் மதுரையை முற்றுகையிட்டு வென்றார். இதற்கிடையில் கி.பி. 1768-இல் முகமதலி தம் தலைநகரைத் திருச்சியிலிருந்து சென்னைக்கு மாற்றி அங்கு சேப்பாக்கத்தில் ஓர் அரண்மனை எழுப்பினார். பின்னர் தஞ்சை மராட்டிய மன்னர் துளஜாஜி மீது பல குற்றங்களைச் சாட்டி 1773-இல் அவரையும் அவரது ஆட்களை யும் சிறையிலடைத்தார். இதற்கும் இவருக்கு ஆங்கிலப் படை உதவியது. இந்த நடவடிக்கையை இங்கிலாந்து அதிகாரிகள் விரும்ப வில்லை. அப்போது சென்னை ஆளுநராக இருந்த பீகோ 1776-இல் துளஜாஜியை மீண்டும் தஞ்சை மன்னராக்கினார்.

இந்நிலையில், மைசூர் சண்டையையொட்டி 1787-இல் காரன் வாலிஸ் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். இதன்படி ஆங்கிலேயர் கள் 15 லட்சம் வராகனைப் பெற்றுக்கொண்டு, கருநாடகத்தைக் காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். நவாபின் கடன் மிகவும் பெருகிவிட்டது. அதற்கு ஈடுசெய்ய அவர் தனது வருவாய் முழுவதை யும் கொடுக்கவேண்டி வந்தது. இறுதியில் முகமதலி கி.பி. 1795-இல் இறந்தார்.

## உம்தத்-உல்-உம்ரா (கி.பி. 1795-1801)

முகமதலிக்குப் பின் அவர் மகன் உம்தத்-உல்-உம்ரா ஆட்சிக்கு வந்தார். இவர் தம் தந்தை ஆங்கிலேயரிடம் பெற்ற கடன்களுக்காக மிகவும் அவதியுற்றார். எனினும், ஆங்கிலேயர்களின் சூழ்ச்சிக்கும், மிரட்டலுக்கும் பணியாமல் திறமையாகச் சமாளித்தார். நாட்டின் நிர்வாகத்தையும், நீதியையும் தம் பொறுப்பிலேயே வைத்திருந்தார். ஆங்கிலேயர்கள் தம் கடனுக்கு ஈடாகக் கருநாடகத்தின் சில பகுதி களைக் கேட்டனர். நவாப் இதற்கு இசையவில்லை. இதனால், ஆங்கிலேயருக்கும் இவருக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டது. இவர் தம் ஆட்சிக் காலத்தில் நிம்மதியாக இருக்க இயலவில்லை. உம்ரா கி.பி. 1801-இல் உயிர் நீத்தார்.

## கடைசி நவாபுகள்

உம்ராவின் இறப்பிற்காகவே காத்திருந்ததுபோல ஆங்கிலேயர்கள், அவருக்குப் பின் அவர் மகன் அலி உசேனுக்கு நவாப் பட்டம் தர மறுத்து, மற்றொரு மகனான அசிம்-உத்-தௌலாவுடன் (கி.பி. 1801-1819) ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இதன்படி அசிம்-உத்-தௌலா பெயரளவில் கருநாடக நவாபாக இருப்பார் என்றும், மொத்த வருவாயில் ஐந்தில் ஒரு பங்கு உதவித் தொகையாக நவாப் பெறுவாரென்றும், மாநிலத்தில் சிவில், இராணுவ நிர்வாகம் முழுவதையும் ஆங்கிலேயர் ஏற்றுக்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அசிம்-உத்-தௌலாவிற்குப் பின் அவர் மகன் அஜம்-ஜா-பகதூர் (கி.பி. 1819-1825) நவாபானார். இவர் கி.பி. 1825-இல் இறக்கும் போது இவருடைய மகன் கௌஸ்கான் ஒரு வயதுக் குழந்தை. இக் குழந்தைக்கு வயது வரும் வரை அஜம்ஜாவின் தம்பி 'அசிம்கான்' என அழைக்கப்படும் அசிம்ஜா 'ரீஜெண்ட்' ஆக நியமிக்கப்பட்டார். பின் கி.பி. 1842 முதல் கௌஸ்கான் நவாபாக செயல்பட்டார். கி.பி. 1855-இல் கௌஸ்கான் தமக்குக் குழந்தைகள் இல்லாமல் இறந்துவிடுகிறார். இந்நிலையில், வாரிசுரிமை (Doctrine of Lapse) இல்லை என்னும் காரணம் காட்டி கவர்னர்-ஜெனரல் லார்டு டல்ஹௌசி கருநாடக ஆட்சி முழுவதையும் ஆங்கிலேயர் வசமாக்கிக்கொண்டார்.

இதனை எதிர்த்து அசிம்ஜா இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கும், விக்டோரியா பேரரசிக்கும் தம் உரிமைகள் வேண்டி விண்ணப்பித்துக்கொண்டார். இவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் 1870-இல் விக்டோரியா பேரரசி ஓர் ஆணை பிறப்பித்தார். இதன்படி, அசிம்ஜா "ஆர்க்காட்டு இளவரசர்" என்று அழைக்கப்படுவார் என்றும், இவருக்குப் பிறகு இவர் வழித்தோன்றல்களும் இப்பட்டத்தைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்வார்கள் என்றும், ஆனால் ஆட்சியில் இவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும் கூறப்பட்டது. ஆர்க்காட்டு இளவரசர் தம் கடன்களை அடைப்பதற்கு முதலில் ரூபாய் பதினைந்து லட்சம் வழங்கப்படும் என்றும், தொடர்ந்து ஆண்டுக்கு ரூபாய் மூன்று லட்சம் மான்யமாக வழங்கப்படும் என்றும்

இவ்வாணை மேலும் கூறியது. அசிம்ஜாவைத் தொடர்ந்து ஜாகீர் உத்தீன், அகமத்துல்லா, முகமது முனவர், குலாம் முகமதலி, குலாம் மொய்தீன்கான் ஆகியோர் ஆர்க்காட்டு இளவரசர்களாகப் பட்ட மேற்றார்கள். 1969-ஆம் ஆண்டு முதல் திரு. ஜி. எம். அப்துல் காதர் என்பவர் ஆர்க்காட்டு இளவரசராக உள்ளார். இவருடைய மூத்த புதல்வர் நவாப்ஜாதா முகமது அப்துல் அலி என்பவர் சென்னை மாநகரத் தலைக் குடிமகனாக அரசால் இருமுறை நியமிக்கப்பட்டுள்ளார்.

———

# நவாபுகள் கால ஆட்சி முறையும், சமுதாய நிலையும்

## நவாபுகள் கால ஆட்சி முறையும் சமுதாய நிலையும்

நவாபுகள் தம் ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காக, மராட்டியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், பாளையக்காரர்கள் எனப் பலரோடு போர் செய்ய வேண்டி இருந்தது. இதனால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் விரயமாயின. பல தொல்லைகளுக் கிடையிலும் அவர்கள் நிறுவிய ஆட்சி, மேற்கொண்ட சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றில் பல இன்றும் பின்பற்றப் படுகின்றன.

### நாட்டுப் பிரிவுகள்

பேரரசு 'சுபா' (மாநிலம்) என அழைக்கப்பட்டது. சுபா பல கில்லாக்களாகவும் (ஜில்லா-மாவட்டம்), கில்லா பல ஜாகீர்களாக வும் (ஜாகீர்-வட்டம்), ஜாகீர் பல பர்கானாக்களாகவும் (பிர்கா-துணை வட்டம்), பர்கானாக்கள் பல கிராமங்களாகவும், மதுராக் களாகவும் பிரிக்கப்பட்டு நிர்வாகம் மிகவும் செம்மையாக நடத்தப் பட்டது. சுபாவின் தலைவர் சுபேதார் அல்லது நவாப் எனவும், கில்லாவின் தலைவர் கில்லேதார் எனவும், ஜாகீரின் தலைவர் ஜாகீர்தார் என்றும், பர்கானாவின் தலைவர் அமானி அல்லது அமல்தார் எனவும் அழைக்கப்பட்டார்கள். சுபா முழுவதையும் சீரான முறையில் நிர்வகிக்க நவாபுக்குத் துணையாக திவான் என்பவர் செயல்பட்டார். திவான்தான் மாநிலத்தின் உண்மையான நிர்வாகி எனலாம்.

### நிலவரி

மாநிலத்திலுள்ள விளை நிலங்கள் அனைத்தும் முறைப்படுத்தப் பட்டு, அவற்றிற்கு வரிகள் விதிக்கப்பட்டன. நிலவரி "பேஸ் கிஸ்தி" என்னும் பெயரில் காசாகவும், விளைபொருட்களாகவும் வசூலிக்கப் பட்டன. நிலவரியே நாட்டின் முக்கிய வருவாயாகக் கருதப்பட்டது. அரசுக்குச் சொந்தமான நிலங்கள் 'கால்சா' என அழைக்கப்பட்டன. தரிசு நிலங்களுக்கு, வறட்சிக் காலங்களில் நிலவரி ரத்து செய்யப் பட்டது. நஞ்சை நிலங்களின் வரி விகிதங்கள் ஆண்டுக்கு ஆண்டு

மாறுபட்டது. இதனால் வரி செலுத்த முடியாமல் குடியானவர்கள் தவித்தனர். வரி செலுத்தாதவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

## வறட்சி நிவாரணப் பணி

கர்நாடகத்தில் கி.பி. 1773-இல் மாபெரும் பஞ்சம் தோன்றியது. இக்காலத்தில் உணவு தானியங்கள் நவாபின் ஆட்சிக்குட்பட்ட மற்ற பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கொண்டுவரப் பட்டன. இந்து, முஸ்லீம் என எந்த பாகுபாடும் இல்லாமல் பாதிக்கப் பட்ட அனைத்து ஏழை மக்களுக்கும் வேளைக்குக் கால் சேர் சமைத்த சோறும், தயிரும் வழங்கப்பட்டன. இதற்காக அன்னச் சத்திரங்கள் அனைத்து ஊர்களிலும் திறக்கப்பட்டன. இந்த சத்திரங்களில் அனைத்து இன மக்களும் சாப்பிடுவதற்கு ஏற்றவாறு உணவு சமைப் பதற்கு பிராமணர்கள் நியமிக்கப்பட்டனர். நவாபின் ஆட்சிக்குட் பட்ட பகுதியைச் சேர்ந்த எந்த ஒரு குடிமகனும் பஞ்சத்தால் இறக்கக் கூடாது என்னும் உயர்ந்த கோட்பாடு கண்டிப்புடன் பின்பற்றப் பட்டது. நிவாரணப் பணி சிறப்புற நடைபெற இறைவனிடத்தில் பயமும், உண்மை நோக்கும் கொண்டவர்களையே மேற்பார்வை யாளர்களாக நியமித்தனர்.

## தண்ணீர்ப் பந்தல் மற்றும் விதவைகளுக்கு உதவித்தொகை

தண்ணீர்ப் பஞ்ச காலங்களில் அனைத்துப் பெருவழிகளிலும் தண்ணீர்ப் பந்தல்கள் (ஜலந்தாரிகள்) அமைத்து வழிப்போக்கர் களுக்குத் தண்ணீர் வழங்கினார்கள். ஏழைப் பெண்களுக்கும் விதவைகளுக்கும் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்பட்டது.

## சமய சார்பற்ற கொள்கை

ஆர்க்காட்டு நவாபுகள் சமயச் சார்பற்ற கொள்கையைப் பின் பற்றினார்கள். இந்து மத கோஸ்வாமிகள், மகான்கள் மற்றும் புரோகிதர்களுக்கும், இஸ்லாமிய மறைஞானிகள் மற்றும் பக்கிரி களுக்கும் நாட்படி வழங்கப்பட்டது. கோயில்கள், மடங்கள், சத்திரங்கள், மசூதிகள், தர்க்காக்கள் போன்றவற்றிற்கு மானியங்கள் விடப்பட்டன. உதாரணமாக நவாப் வாலாஜா திருவரங்கத்திலுள்ள

ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயிலுக்கு விளைநிலங்களையும், தோட்டத்தையும் தானமாக வழங்கினார். அத்தோட்டம் திருச்சியில் தற்போது "நவாப் தோட்டம்" என அழைக்கப்படுகிறது. இவர் கிறித்துவ ஆலயங்களுக்கும் நிலங்கள் கொடுத்துள்ளார்.

பிற மதத்தவர்கள் தங்கள் மதச் சடங்குகளை விரிவாகச் செய்யவும், விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடவும் அனுமதிக்கப்பட்டார்கள். கோயில்களுக்கும், புண்ணியத் தலங்களுக்கும் செல்லும் பக்தர்களுக்குச் சிறப்பு ஏற்பாடுகளும், பாதுகாப்பும் அளிக்கப்பட்டன.

## மருத்துவ வசதி

ஆர்க்காட்டு நவாபுகள் தம் நாட்டு மக்களுக்குச் சிறப்பான சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். மருத்துவமனைகள் திறமை வாய்ந்த மருத்துவர்களால் நிர்வகிக்கப்பட்டன. மருத்துவமனைகளில் இலவச உணவும், படுக்கையும் மருந்துகளும் அளிக்கப்பட்டன. கண் தொடர்பான நோய்களுக்குத் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. மருத்துவமனைக்குள் அனுமதிக்கப்படும் ஒரு நோயாளி சிறந்த முறையில் உடல் நலம்பெற்று வெளியேறும்போது மருத்துவம் பார்த்த மருத்துவருக்குச் சிறப்பூதியம் வழங்கப்பட்டது. அநாதை இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டன.

## இசுலாமியர் மருத்துவ முறை

இசுலாமியர்கள் 'யுனானி' என்னும் மருத்துவ முறையைப் பின்பற்றினார்கள். இந்த மருத்துவ முறையை அரேபிய வணிகர்கள் இந்தியாவிற்கு வந்தபோது, இங்குள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். யுனானி என்னும் சொல் கிரேக்க மொழியைச் சேர்ந்தது. முதலில் இத்தகைய மருத்துவ முறையை கிரேக்கர்களிடமிருந்து அரேபியர் அறிந்து, அதனைப் பலவாறு மேம்படுத்தி, அதிக அளவில் பயன்படுத்தினர். எனவே, இது இசுலாமியர்களின் தலைசிறந்த மருத்துவ முறையாகப் பரிணமித்தது. அரபு நாட்டைச் சேர்ந்த அபூபக்கர், ஜகரியா, அல்ரஸி, அலி அப்பாஸ் ஆகியோர் இம்மருத்துவத்தில் தலைசிறந்த முன்னோடிகளாவர். இசுலாமியர்கள் யுனானி மருத்துவ முறையை நம்நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றி

அமைத்து உபயோகப்படுத்தினார்கள். ஆர்க்காட்டு நவாபுகள் இந்த மருத்துவ முறையின் வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவளித்தார்கள். ஹக்கீம் அகமதுல்லாகான் தாலவி என்னும் மருத்துவர் நவாப் வாலாஜா காலத்தில் தலைசிறந்தவராக விளங்கினார். இவர் எழுதிய 'குலஸ்த்-உல்-இக்மா', 'தகீக்-அல்-பக்ரன்' போன்ற யுனானி மருத்துவ நூல்கள் தலைசிறந்து விளங்கின. மேலும், இம்மருத்துவத்தைப் பற்றிப் பல சிறந்த நூல்கள் நவாபுகள் காலத்தில் எழுதப்பட்டன.

## நீதி

மாநிலத்தின் தலைநகரான ஆர்க்காட்டில் (முகமதுபூர்) தலைமை நீதிமன்றம் (High Court) இருந்தது. மேலும் அனைத்து கில்லா (ஜில்லா)க்களிலும், ஜாகீர்களிலும் (வட்டம்) முதல் மற்றும் இரண்டாம் நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டன. நீதிபதிகள் அனைவரும் சிறந்த கல்விமான்களாகவும், இறையன்பு உடையவர் களாகவும் விளங்கினர். வழக்குகள் அனைத்திற்கும் இறைவன் பெயராலேயே தீர்ப்புகள் வழங்கப்பட்டன. நவாபுகளின் அலுவலக மொழியாக (Official Language) பாரசீக மொழி பயன்படுத்தப் பட்டது. எனவே தீர்ப்பு விவரங்கள் யாவும் பாரசீக மொழியிலேயே வழங்கப்பட்டன. காஜி என்பவர் நீதிபதியாகவும், சிரஸ்தார் என்பவர் நீதிமன்ற நிர்வாகியாகவும் செயல்பட்டனர்.

## படை

"ஒரு நாட்டுக் குதிரைப் படையின் அளவைக் கொண்டுதான் அந்நாட்டின் செல்வச் செழிப்பின் நிலையை அறிய முடியும்" என்னும் முகலாயப் பேரரசர் அக்பரின் கூற்றுக்கேற்ப நவாபுகள் தங்கள் குதிரைப் படையைச் சிறப்பானதாக அமைத்துக் குதிரைகளை நல்ல முறையில் பராமரித்தனர். அக்காலத்தில் திருப்பதியில் குதிரைகள் விற்கப்படும் பெரிய சந்தை ஒன்று இருந்தது. அச்சந்தையிலிருந்து நவாபுகள் ஒரு தடவைக்குக் குறைந்தது 10,000 குதிரைகளைத் தம் குதிரைப் படைக்கு வாங்கினார்கள். நவாப் முகமதலி வாலாஜா குதிரை ஏற்றத்திலும், போர் செய்வதிலும் மிகவும் திறமைசாலியாக விளங்கினார். போர்க் காலங்களில் தம் படைகளுக்கு நவாப் வாலாஜாவே தலைமைதாங்கிச் செல்வார். இவர் ஆங்கிலேயர் களுடன் நட்புறவு கொண்டிருந்ததால், அவர்களுடைய சிறந்த

கட்டுப்பாடான படை அமைப்பு முறைகளைத் தம்முடைய படையிலும் புகுத்தினார். ஆங்கிலேயர்களைக் கூடத் தம் படையில் அலுவலர்களாகவும், போர் வீரர்களாகவும் சேர்த்துக் கொண்டார். அனைத்துப் படைகளுக்கும் நவாபே தலைவராவார். படைகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் 'பௌசுதார்' என்பவர் துணைத் தலைவராக விளங்கினார். படைகளுக்கு ஆகும் செலவுக் கணக்குகளை நிர்வகிக்க 'பக்ஷி' என்பவர் நியமிக்கப்பட்டார்.

## கோட்டைகள்

நவாபுகள் தங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்காகப் பெரும் போர்களில் ஈடுபட வேண்டியதாயிற்று. இதற்காக இவர்கள் கருநாடகத்தில் பல கோட்டைகளை நிறுவி அவற்றில் தம் படைகளை நிலையாக வைத்திருந்தார்கள். இக்கோட்டைகளில் படை நிர்வாக அலுவலகங்களுடன் நாட்டு நிர்வாக அலுவலகங்களும் செயல்பட்டன.

**கோட்டைகள் இருந்த இடங்கள் வருமாறு :**

| | | | |
|---|---|---|---|
| 1 | கிடங்கில் | 21 | வாலிகண்டபுரம் |
| 2 | பெருமுக்கல் | 22 | ஆரணி |
| 3 | வழுதாவூர் | 23 | சேத்துப்பட்டு |
| 4 | விருத்தாசலம் | 24 | செங்கற்பட்டு |
| 5 | முஸ்தாபகட் (சங்கராபுரம்) | 25 | கயிலாசகட் |
| 6 | பாளையங்கோட்டை | 26 | செக்குதேவகட் |
| 7 | இராவுத்தநல்லூர் | 27 | வாணியம்பாடி |
| 8 | தளவாய்கட் | 28 | சுலுபகட் |
| 9 | இறைஞ்சன்குடி | 29 | வேலூர் துருக்கம் |
| 10 | போளூர் | 30 | கெடாம்பூர் |
| 11 | வேப்பூர் | 31 | பேரணாம்பட்டு |
| 12 | சிதம்பரம் | 32 | கருங்குழி |
| 13 | திருவண்ணாமலை | 33 | பூவிருந்தவல்லி |
| 14 | எலையநாசூர் (எலவானாசூர்) | 34 | மயிலாப்பூர் |
| | | 35 | திருப்பாச்சூர் |
| 15 | பெண்ணாத்தூர் | 36 | தாமரைப்பாக்கம் |
| 16 | கெம்பகட் | 37 | திமிரி |
| 17 | கர்நாடககட் | 38 | ஆர்க்காடு |
| 18 | மல்லிகார்சுனகட் | 39 | வேலூர்க்கோட்டை |
| 19 | திம்மப்பையதுருக்கம் | 40 | வந்தவாசி |
| 20 | தியாகதுருக்கம் | 41 | படவேடு |

42 வண்ணான் துருக்கம்
43 சக்கிலி துருக்கம்
44 ஆம்பூர்
45 சந்திரகிரி
46 உதயகிரி
47 இராணிப்பேட்டை
48 சத்தியவீடு
49 கிருஷ்ணகிரி
50 சித்தூர்
51 ஊத்துக்கோட்டை
52 நாகலாபுரம்
53 நின்றையூர்
54 நாராயணவனம்
55 காளாஸ்திரி
56 நெல்லூர்
57 திருமுல்லைவாயில்
58 கரிகிரி
59 மகிமண்டலம்
60 திருப்பத்தூர்
61 தேசூர்
62 காவிரிப்பாக்கம்
63 காஞ்சீபுரம்
64 கலவை
65 செஞ்சி (ஏழு கோட்டைகள்)
66 பறங்கிப்பேட்டை
67 சித்தபேட்டை
68 வாகன் தருவை
69 அரியலூர்
70 வேட்டவலம்
71 திருச்சி
72 வெங்கட்கிரி
73 இராமகிரி
74 துறையூர்
75 திருவதிகை
76 புவனகிரி
77 வல்லம்
78 பெரம்பலூர்

மேற்கூறிய கோட்டைகள் பட்டியலில் சில இடங்களின் இறுதியில் "கட்" என முடிந்துள்ளது. பாரசீக மொழியில் "கட்" என்றால் கோட்டை என்று பொருள்.

### கலைகளும் கைத்தொழில்களும்

நவாபுகள் தம் ஆட்சியின் பெரும் பகுதியைப் போர்களில் கழித்தாலும், கலைகளுக்கும் கைத்தொழில்களுக்கும் மிகுந்த ஊக்க மளித்தார்கள். கலைஞர்களும், கைத்தொழில் வினைஞர்களும் பெரிதும் மதிக்கப்பெற்றார்கள். தோட்டக்கலையில் பெரும் ஆர்வம் காட்டினார்கள். நவாபுகள் தாம் எழுப்பிய அரண்மனைகள், மசூதிகள் போன்றவற்றின் முன் பெரிய தோட்டங்களை அமைத் தனர். தோட்டக்கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களை ஔரங்காபாத்திலிருந்து அழைத்து வந்தனர். குறிப்பாக மாமரங் களை வளர்ப்பதில் தனியார்வம் செலுத்தினார்கள். "நசீர்ஜங் பசந்த்", "இமாம் பசந்த்" என மாங்கனிகளுக்குப் பெயர்கள் சூட்டி மகிழ்ந்தனர். நவாபுகள் கால மரவேலைப்பாடுகளும், பீங்கான் மட்பாண்டங்களும் இன்றும் போற்றப்படுகின்றன.

# இசுலாமியக் கட்டடக் கலை

# இசுலாமியக் கட்டடக் கலை

இசுலாமியர்கள் இந்தியாவின் மீது மேற்கொண்ட படையெடுப்புகளால் இந்தியப் பண்பாட்டிலும், மக்கள் வாழ்க்கை முறையிலும் மட்டுமல்லாது, அவர்கள் தொன்றுதொட்டு பின்பற்றி வந்த கலைத் துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. குறிப்பாகக் கட்டடக் கலையில் இந்திய-இசுலாமியக் கூறுகள் இணைந்த ஒரு புதிய கலைப் பாணியே உருவாகியது.

கட்டடங்களின் வாயில்களிலும், சாளரங்களிலும், தூண்கள் மற்றும் சுவர்களுக்கு இடையிலான பகுதிகளிலும் அழகான வளைவுகளை அமைப்பதுதான் இசுலாமியரின் முக்கியமான கட்டடக் கலைப் பணியாகும். இசுலாமியர்கள்தான் இத்தகைய வளைவு (Arches) அமைப்புகளை இந்தியக் கட்டடக் கலையில் புகுத்தினார்கள். இதனால், வாயில் மேற்கட்டை (Lintal), சுவரில் சுமை தாங்குவதற்காக வைக்கப்பட்ட கல் (Carbel) போன்றவை வளைவுகள் மற்றும் கவிகை மாடங்களாக (Domes) மாற்றம் பெற்றன. பட்டைக் கூம்பு வடிவுடைய கூரைகள் மற்றும் தூபி முனைகளுக்குப் பதிலாக கவிகை மாடங்களை அமைத்தார்கள். சதுர வடிவமான கட்டடத்தின் மீது கெட்டியான, வட்ட வடிவமான கவிகை மாடத்தை (Dome) அமைப்பதற்கு ஏற்ற வகையில் உள் வளைவுக் கட்டுமானங்களைக் கொடுத்து, பக்கங்களையும், கோணங்களையும் பன்மடங்காக்கினார்கள். பொதுவாக, எளிய கட்டமைப்புடைய திறந்த கூடாரங்கள், உயரமான தூபிகள், வில் வடிவ நுழைவாயில்கள் போன்றவை இந்திய-இசுலாமிய கட்டடக் கலையின் முக்கிய கூறுகளாகும். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மதுரை சுல்தான்களும், பின்னர் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த ஆர்க்காடு நவாபுகளும் தமிழகத்தில் இந்திய-இசுலாமியப் பாணியில் பல கட்டடங்களை எழுப்பினார்கள்.

தமிழகத்தில் இசுலாமியர் பாணி கட்டடங்களை (1) மதச் சார்பற்ற கட்டடங்கள் (Secular Architecture), (2) மதச் சார்புள்ள கட்டடங்கள் (Religious Architecture) என இருவகையாகப் பிரிக்கலாம்.

### மதச் சார்பற்ற கட்டடங்கள்

இதில் முக்கியமாக, ஆர்க்காடு நவாபுகள் எழுப்பிய அரண்மனைகளும், கோட்டைகளும் அடங்கும். பொதுவாக நவாபுகள் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை நுழைவாயில்கள் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றன. அரண்மனைகள் இரண்டு அல்லது மூன்று தளங்களைக் கொண்டு விளங்குகின்றன. இவற்றின் வாயில்களும், சன்னல்களும் இசுலாமிய வளைவு அமைப்புடன் விளங்குவது சிறப்பானதாகும். இக்கட்டடங்களின் மேற்பகுதியில் அழகிய கவிகை மாடங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மீது அழகிய வண்ணங்கள் தீட்டப்பட்டன. இத்தகைய இசுலாமிய கட்டடப் பாணி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து நிலவியது.

இந்துக்கள் தாம் எழுப்பிய கட்டடங்களில் இயற்கையோடு இயைந்த வகையில் மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் போன்றவற்றைச் சிற்பங்களாகச் செதுக்கியும், ஓவியங்களாக வரைந்தும் அழகுபடுத்தினார்கள். ஆனால் இசுலாமியர்கள் தம் கட்டடங்களில் இயற்கைக்கு மாறுபட்ட விசித்திரமான அழகிய பூ வேலைப்பாடுகளையும், செடி கொடிகளைப் போன்றும், அலங்காரக் கோடுகளைப் போன்றும் பல வண்ணங்களில் ஓவியங்களைத் தீட்டினார்கள். சன்னல்கள் வழவழப்பான கல்லில் அழகிய குறுக்குக் கோடுகள், சதுரக் கோடுகள் போன்று வடிக்கப்பட்டு பொருத்தப்பட்டன. அறைகளில் பொருட்கள் வைப்பதற்குரிய அலங்கார மாடங்கள் சுதையால் கவினுறச் செய்யப்பட்டன. இசுலாமியர்கள் சுதையைக் கட்டடங்கள் கட்டுவதற்கு மிக அதிக அளவில் உபயோகப்படுத்தினார்கள். சுவர்களிலும், கூரைப் பகுதிகளிலும் அழகிய பூ வேலைப்பாடுகள் செய்வதற்கும், பல வண்ணங்கள் தீட்டி அழகுபடுத்துவதற்கும் சுதை பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. ஆர்க்காடு நவாபுகளின் தொடக்ககால அரண்மனைக் கட்டடங்களும், பெரும்பான்மையான மசூதிகளும் தர்க்காக்களும் செங்கல் மற்றும் சுதை கொண்டே கட்டப்பட்டுள்ளன. பின்னர் ஆங்கிலேயர் தொடர்புக்குப் பின் கட்டப்பட்ட ஐரோப்பிய-முகமதிய கலைப் பாணிக் கட்டடங்கள் யாவற்றிற்கும் (Indo-Saracenic Style) சுதைப் பூச்சுக்கு மாறாக செங்கல் வண்ணமே தீட்டப்பட்டது. இவற்றின் கூரை ஓடுகளுக்குக்கூடச் செங்கல் வண்ணம் தீட்டப்பட்டது.

ஆர்க்காட்டில் நவாப் சாதத்துல்லாகான் காலத்தில் கட்டப்பட்ட கோட்டைப் பகுதிகளும், வேலூருக்கு அடுத்து அப்துல்லாபுரத் திலுள்ள அப்துல் மஹாலும், சென்னையில் நவாப் முகமதலி வாலாஜாவால் கட்டப்பெற்ற சேப்பாக்கம் அரண்மனையும், சென்னைப் பல்கலைக் கழக செனட் ஹாலும், இராயப்பேட்டை அமீர் மஹாலும், திருச்சியிலுள்ள நவாபுகள் கால அரண்மனைப் பகுதிகளும் கரிகிரி கோட்டையும் மதச் சார்பற்ற கட்டடங்களுக்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

ஆர்க்காட்டில் நவாப் சாதத்துல்லாகான் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுப்பிய கோட்டைப் பகுதிகள் மிகவும் பழமையானவையாகும். இக்கோட்டைப் பகுதிகள் பெரும்பாலும் தற்போது அழிந்துவிட்டன. டெல்லி கேட், கோட்டைப் பகுதியில் உள்ள குளங்கள் மற்றும் உடைகள் மாற்றிக்கொள்வதற்கேற்ற அறைகள் போன்றவையே எஞ்சியுள்ளன. பாலாற்றங்கரையில் அமைந்துள்ள டெல்லி கேட் என்னும் மிக உயர்ந்த நுழைவாயிலே, அக்காலக் கோட்டையின் பிரதான நுழைவாயிலாகும். முகமதலிக்கும் சந்தாசாகிப்பிற்கும் நடந்த உரிமைப் போரில் கி.பி. 1751-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26-ஆம் தேதி ஆங்கிலேயப் படைகள் இராபர்ட் கிளைவ் தலைமையில் முகமதலியின் சார்பாக ஆர்க் காட்டில் சந்தாசாகிப் படைகளைத் தோற்கடித்து ஆங்கில ஆட்சிக்கு இந்தியாவில் வித்திட்டது. இவ்வெற்றியே இந்தியாவின் தலைநக ராகிய டெல்லியைக் கைப்பற்றுவதற்கான தொடக்கம் என்னும் கருத்தில்தான் இவ்வாயில் "டெல்லி கேட்" என இராபர்ட் கிளைவால் பெயரிடப்பட்டது. இந்த நுழைவாயில் இரு தளங்களைக் கொண் டுள்ளது. கீழ்த் தளத்தில் உள்ள நுழைவாயில் இசுலாமிய வளைவுப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இவ்வாயிலின் இருபுறமும் காவலர் கள் தங்குவதற்கான அறைகள் உள்ளன. நுழைவாயிலுக்கு வெளிப் புறம், ஆற்றினை ஒட்டியுள்ள பகுதியிலும் சிறுசிறு அறைகள் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. வாயிலின் மேல் தளத்தில் ஓர் அறை உள்ளது. இது எதிரிப் படைகள் வருவதை வேவு பார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

## அப்துல் மஹால்

வேலூரிலிருந்து பெங்களூர் செல்லும் நெடுஞ்சாலையில் அப்துல்லாபுரம் என்னும் ஊர் உள்ளது. ஆர்க்காடு நவாபுகள்

காலத்தில் வேலூரின் கில்லேதாராக இருந்த அப்துல்லாகான் என்பவரது பெயரில் இவ்வூர் அப்துல்லாபுரம் என அழைக்கப்படுகிறது. இங்குதான் அப்துல்லாகான் 'அப்துல் மஹால்' என்னும் தம் மாளிகையை எழுப்பியுள்ளார். இரண்டு அடுக்குகள் கொண்ட இம்மாளிகையின் முகப்புப் பகுதி கிழக்கு நோக்கியுள்ளது. செங்கல்லும், சுண்ணாம்பும் கொண்டு கட்டப்பட்டுள்ள இம்மாளிகையின் முகப்புப் பகுதியும், உட்பகுதியும் மலர்ச்சரங்கள் போல் சுதையால் வடிக்கப்பெற்று அவற்றின் மீது பல வண்ணங்கள் தீட்டப்பட்டு அழகுற விளங்குகின்றன வாயில்கள் இசுலாமியப் பாணியிலான வளைவுகளைக் கொண்டுள்ளன. கீழ்ப்புறம் பக்கங்களில் மும்மூன்று நுழைவாயில்களும், நடுவில் ஒரு பெரிய நுழைவாயிலும் உள்ளன. மேலே உள்ள மாடிக்குச் செல்வதற்குப் பின்புறம் படிகள் உள்ளன. மாடியின் பிரதான அறையின் சுவர்களில் சிறுசிறு பெட்டிகள் போன்று அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. இவை அழகாகவும் கண்ணைக் கவரும் வகையிலும் அமைந்துள்ளன. இம்மாளிகையின் இடப்புறப் பக்கவாட்டில் குதிரைகள் மற்றும் யானைகள் கட்டுவதற்கான 12 அறைகள் கொண்ட லாயம் ஒன்று உள்ளது. இந்த லாயத்தின் நுழைவாயில்களும் வளைவு அமைப்பிலேயே கட்டப்பட்டுள்ளன.

## கரிகிரிக் கோட்டை

வேலூரிலிருந்து வள்ளிமலை செல்லும் சாலையில் கரிகிரி என்னும் ஊர் உள்ளது. இங்கு ஆர்க்காட்டு நவாபுகள் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று உள்ளது. இதன் மதிற் சுவர் சதுர வடிவில் கட்டப்பட்டு, அதன் நான்கு மூலைகளிலும் வட்டவடிவக் கொத்தளங்கள் (Bastions) அமைக்கப்பட்டுள்ளன. மதிற்சுவர் சுமார் 20 அடி உயரத்திற்குக் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இதன் அகலம் சுமார் 4 அடி ஆகும். கருங்கற்களை இணைப்பதற்கு உட்புறம் களிமண்ணும், வெளிப்புறம் சுதையும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. கிழக்குப்புறம் காணப்படும் நுழைவாயில் இசுலாமிய வளைவு கலைப் பாணியைக் கொண்டுள்ளது. சுமார் 25 அடி உயரமுள்ள இந்நுழைவாயில் முழுவதும் செங்கல்லும் சுதையும் கொண்டு மிக அழகாகக் கட்டப்பட்டுள்ளது. கோட்டைக்குள் ஒரு மசூதியும், நவாபுகள் காலத்தில் கரிகிரியை ஆண்ட கில்லேதார் ஒருவரின்

கல்லறையும் உள்ளன. இக்கோட்டையில் இரண்டு அடுக்குகள் கொண்ட அரண்மனை ஒன்று மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது அரண்மனையின் பிற பகுதிகள் இருந்து அழிந்துபோனதற்கான சுவடுகளும் காணப்படுகின்றன. மேலும் இக்கோட்டைக்குள் இரண்டு பெரிய ஆழமான கிணறுகளும் உள்ளன. கோட்டை மதிற்சுவருக்கு வெளிப்புறத்தில் ஒரு நீச்சல் குளமும், அதனைச் சுற்றிப் பெண்கள் உடை மாற்றிக் கொள்வதற்கான அலங்காரம் செய்யப்பட்ட நான்கு அறைகளும் உள்ளன.

## காலாஸ் மஹால் (சேப்பாக்கம் அரண்மனை)

நவாப் முகமதலி வாலாஜா கி.பி. 1768-ஆம் ஆண்டில் சென்னை சேப்பாக்கத்தில் ஒரு பெரிய அரண்மனையைக் கட்டினார். இதன் தெற்குப் பகுதி 'கலாஸ் மஹால்' என்றும், வடக்குப் பகுதி 'ஹுமாயுன் மஹால்' என்றும் அழைக்கப்பட்டது. இதனைச் சுற்றிப் பெரிய மதிற்சுவர் ஒன்றும் எழுப்பப்பட்டது. இச்சுவர் வடக்கே கூவம் ஆறு முதல் தெற்கே பைக்ராப்ட்ஸ் சாலை வரை நீண்டிருந்தது. தற்போது சென்னைப் பல்கலைக் கழக செனட் ஹால் என்று அழைக்கப்படும் கட்டடம், அந்நாளில் நவாப் வாலாஜாவின் தர்பார் ஹாலாக விளங்கியது. கி.பி. 1855-இல் ஆங்கிலேய அரசு சேப்பாக்கம் அரண்மனையை அரசு அலுவலகங்கள் இயங்குவதற்காக எடுத்துக் கொண்டது. இவ்வரண்மனை இரண்டு தளங்களையும் உயரமான வளைவு அமைப்பு வாயில்களையும், அவற்றிற்கிடையே சதுரத் தூண்களையும் கொண்டு இசுலாமியக் கட்டடக் கலைப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் மேற்பகுதியில் சிறுசிறு தூபிகள் வரிசையாகக் கட்டப்பட்டு அழகிய வண்ணங்களால் பூ வேலைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும், திருச்சியில் நவாப் முகமதலி சில காலம் தங்கியிருந்து கருநாடகத்தை ஆண்டார். அப்போது அவரால் அங்கு கட்டப் பட்ட அரண்மனைகளும் சிறப்பானவையாகும். இதனையடுத்து ஆங்கிலேயர்களும், ஐரோப்பிய-முகமதிய கட்டடக்கலைப் பாணியில் சென்னையிலும் பிற இடங்களிலும் பல கட்டடங்களை எழுப்பினார்கள். அவற்றுள் சென்னை உயர்நீதிமன்றக் கட்டடம் மிகவும் சிறந்ததாகும். இக்கட்டடம் கி.பி. 1892-இல் எச். இர்வின் என்பவரின் மேற்பார்வையில் கட்டப்பட்டது.

இஃதன்றி, ஆர்க்காட்டு நவாபுகள் கருநாடகத்தை ஆட்சி செய்யும்போது பலரோடு பெரும் போர்களில் ஈடுபடவேண்டிய தாயிற்று. இதற்காக இவர்கள் கருநாடகத்தில் 84 இடங்களில் கோட்டைகளை எழுப்பி, அவற்றில் நிலையாகப் படைகளை வைத்திருந்தார்கள். இக்கோட்டைகளும் நவாபுகள் காலக் கட்டடக் கலையைப் பற்றி அறிந்துகொள்வதற்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன. இத்தகைய கோட்டைகள் படைகள் தங்குவதற்கு மட்டுமல்லாமல் அப்பகுதியை நிர்வகிக்கும் ஆட்சிக் கூடங்களாகவும் திகழ்ந்தன. இக்கோட்டைகளில் பல, நவாபுகளுக்கு முன்பு அப் பகுதிகளை ஆண்ட இந்து மதத்தைச் சேர்ந்த குறுநில மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டவை. பின்னர், இவை நவாபுகளால் கைப் பற்றப்பட்டு புதுப்பிக்கப்பட்டன. இத்தகைய கோட்டைகளில் செஞ்சி, மகிமண்டலம், வேலூர், வந்தவாசி, வாலிகண்டபுரம், சத்திபவீடு, படைவீடு, நின்றையூர், சிதம்பரம், தியாகதுர்க்கம், பாளையங்கோட்டை, பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம் போன்றவை முக்கியமானவையாகும். இவற்றோடு, புதியதாகவும் கோட்டைகளை இவர்கள் நிறுவினார்கள். இவற்றுள் கரிகிரி, வேலூர் மலைக் கோட்டை, கெடாம்பூர், ஆம்பூர், பேரணாம்பட்டு, திமிரி, கலவை, இராவுத்தநல்லூர், தளவாய்கட், சுலுபகட், கிருஷ்ணகிரி, தேவகட், முஸ்தாபகட், ஆர்க்காடு, வேப்பூர், தாமரைப்பாக்கம் போன்றவை முக்கியமானவையாகும்.

### மதச் சார்புள்ள கட்டடங்கள்

தமிழகத்தில் இசுலாமியர்களின் மதச் சார்புள்ள கட்டடங்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவை : (1) மசூதி (அ) பள்ளிவாசல், (2) தர்கா, (3) ஈத்கா, (4) மக்பரா, (5) மதரஸா என்பவையாகும். இவை குறித்து விளக்கமாகக் கீழே காண்போம்.

### மசூதி

மசூதி அல்லது பள்ளிவாசல் என்பது ஒரு நாளைக்கு ஐந்து வேளையும் இறை தொழுகை நடத்துமிடமாகும். சாதாரண இந்துக் கோயில்கள் கருவறையும் மற்றும் முன் மண்டபங்களும் கொண் டிருக்கும். ஆனால் கூட்டு வழிபாட்டு முறையைப் பின்பற்றும் இசுலாமியர்களின் மசூதியில் ஒரு பரந்த சுற்றுக்கட்டு வெளியிடமும் (Courtyard), அதன் மேற்குப்புரத்தில் ஒரு பெரிய வழிபாட்டு

மண்டபமும் இருக்கும். வழிபாட்டு மண்டபத்தின் பின்புறச் சுவரின் நடுப்பகுதியில் ஒரு மாடக்குழி அமைக்கப்பட்டிருக்கும். இதற்குப் பெயர் 'மிஹ்ராப்' என்பதாகும். இதனை நோக்கிதான் வழிபாடு செய்தல் வேண்டும். இதன் வலப்புறம் வழிபாடு நடத்தும் தலைமை குருமார் (இமாம்) அமருவதற்கேற்ற மேடை அமைக்கப்பட்டிருக்கும். இம்மண்டபத்தின் கூரையின் நடுவில் கவிகை மாடமும் (Dome) நாற்புறமும் தூபிகளும் (Minars) அழகுறக் கட்டப்பட்டிருக்கும். பள்ளிவாசல் தூபிகள் (Minars) முதலில் வழிபாட்டில் நம்பிக்கையை உணர்த்துவதற்காக அமைக்கப்பட்டது. பின்னர், இது இசுலாமியக் கட்டடக் கலையின் ஒரு முக்கிய அங்கமாகவே மாறிவிட்டது. சில நேரங்களில் வழிபாட்டு மண்டபத்தின் யாதாவது ஒரு மூலையில் அல்லது யாதாவது ஒரு பகுதியில் ஓர் அறை கட்டப்பட்டிருக்கும். இவ்வறை "பர்தா"வைக் கடைப்பிடிக்கும் இசுலாமியப் பெண்கள் இருப்பதற்காகப் பயன்படும். பொதுவாக மசூதியின் நுழை வாயில் கிழக்குப் புறத்தில் அமைக்கப்படும். மற்ற பக்கங்கள் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்கும். கை கால்களைக் கழுவுவதற்காகப் பயன்படுத்தப்படும் நீர் நிரம்பிய ஒரு தொட்டி சுற்றுக்கட்டு வெளியிடத்திலேயே அமைக்கப்பட்டிருக்கும்.

தமிழகத்தில் கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதல் இசுலாமியப் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளன. தொடக்க காலத்திய பள்ளி வாசல்கள் யாவும் இந்துக் கோயில்களைப் போன்று கருங்கற்களைக் கொண்டே கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கருங்கற்களால் கட்டப் பட்டுள்ள பள்ளிவாசல்களில் திருச்சி கல்லுப் பள்ளிவாசலும், காயல் பட்டினம் பெரிய பள்ளிவாசலும், கீழக்கரை பெரிய பள்ளிவாசலும், திருப்பரங்குன்றம் மலைமேல் உள்ள பள்ளிவாசலும், தஞ்சை ரயிலடி பள்ளிவாசலும் முக்கியமானவையாகும். மற்ற பெரும் பாலான பள்ளிவாசல்கள் யாவும் செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டே கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மிக முக்கியமானது சென்னைத் திருவல்லிக்கேணியிலுள்ள வாலாஜா பெரிய பள்ளி வாசலாகும். இது நவாப் முகமதலி வாலாஜாவால் கட்டப்பட்ட தாகும். இந்தப் பள்ளிவாசலில்தான் இசுலாமியரல்லாத ஒருவர், அதாவது நவாப் வாலாஜாவின் அந்தரங்க செயலாளர் ராஜா மக்கன்லால் என்பவர் எழுத்துக்களிலிருந்தே ஆண்டுக் குறிப்பு

தருகிற Chronogram கல்வெட்டு ஒன்றைப் பொறித்து வைத்துள்ளார்.

**திருச்சி கல்லுப்பள்ளி**

இது திருச்சிக் கோட்டை இரயில் நிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இப்பள்ளிவாசல் சதுர வடிவில் மண்டபம் போன்ற அமைப்பில் இந்து கோயில்களின் மண்டபங்களில் காணப்படுவது போல், எளிமையான நாற்பட்டை தூண்களைக்கொண்டு கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இதனைக் கல்லுப்பள்ளி என்றும், ஹாஜி சையதீன் முகம்மது இப்ராஹிம் தைக்கர் பள்ளிவாசல் என்றும் அழைக்கிறார்கள். இப்பள்ளிவாசல் கிழக்கு நோக்கி உள்ளது. தொழுகை நடத்தும் மதக்குரு அமரக் கூடிய மேடைக்கு மேல் ஒரு பாரசீகக் கல்வெட்டு உள்ளது. இப்பள்ளிவாசலை முகமது அன்வர் என்பவரின் மகன் அப்துல்லா என்பவர் கட்டியதாக இக்கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டில் ஹிஜிரி ஆண்டு 116 குறிக்கப்பட்டுள்ளது. ஹிஜிரி ஆண்டு கி. பி. 622-இல் தொடங்குகிறது. எனவே இக்கல்வெட்டு (622+116=738) கி. பி. 738-ஆம் ஆண்டைச் சேர்ந்தது எனத் தெரிகிறது. (இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் ஆண்டு சரியானது தானா என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது.) உண்மையாக இருப்பின் இக்கல்வெட்டுதான் தமிழகத்திலுள்ள மிகப் பழமையான பாரசீகக் கல்வெட்டாகும்.

காயல்பட்டினத்திலுள்ள பெரிய பள்ளிவாசல் கி.பி. 1337-ஆம் ஆண்டில் முகமது ஜமாலுதீன் என்னும் மதுரை சுல்தானால் கட்டப்பட்டது. மேலும் இங்குள்ள கற்புடையார்பள்ளி கி.பி.16-ஆம் நூற்றாண்டிலும், கொடிமர சிறுநாயனார்பள்ளி கி.பி.18-ஆம் நூற்றாண்டிலும் கட்டப்பட்டன. கீழக்கரைப் பெரிய பள்ளிவாசலும், திருப்பரங்குன்றம் மலைமேல் உள்ள பள்ளிவாசலும் கி.பி.14-ஆம் நூற்றாண்டிலும்; தஞ்சை ரயிலடியில் உள்ள பள்ளிவாசல் கி.பி.16-ஆம் நூற்றாண்டிலும் கட்டப்பட்டன.

**தர்கா**

இசுலாமிய இறைஞானிகள் (ஒலியுல்லாக்கள்) அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் தர்கா எனப்படும். இறந்தவர்களை அடக்கம் செய்த கல்லறைகள் மீது சதுரவடிவில் அறை எழுப்பி, அதன்மீது அழகிய கவிகை மாடமும், தூபிகளும் அமைத்தனர். இத்தகைய தர்காக்களிலும் தொழுகை நடத்தப்பெறும்.

தமிழகத்திலுள்ள தர்காக்களில், (1) ஏர்வாடி சுல்தான் சையது இப்ராஹிம் தர்கா (2) நாகூர் காதிர் அவுலியா தர்கா (3) திருச்சி நத்தர்ஷா தர்கா (4) காயல்பட்டினம் சேக் சதக்கதுல்லா அப்பா தர்கா (5) ஆர்க்காடு திப்பு அவுலியா தர்கா (6) ஆர்க்காடு காதிர் அவுலியாவின் ஆசியில் பிறந்ததால் அப்பெயரையே சூட்டப்பெற்றார். தமிழகத்திலுள்ள மற்ற தர்காக்கள் பெரும்பாலும் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் எழுப்பட்டவையாகும்.

**ஈத்கா**

இரம்சான் மற்றும் பக்ரீத்போன்ற பெருநாட்களில் கூட்டுத் தொழுகை நடத்துமிடம் 'ஈத்கா' என அழைக்கப்படும். வடக்கு தெற்காக நீண்ட கனமான சுவர் ஒன்று எழுப்பப்படும். அதன் நடுவில் கிழக்கு திசையை நோக்கியபடி ஒரு சிறிய கவிகை மாட (Dome) அமைப்பும், சுவரின் இரு கோடிகளில் இரண்டு தூபிகளும் (Minars) அமைக்கப்படும். இதன் எதிரில் உள்ள வெற்றிடத்தில் கூட்டுத்தொழுகை நடத்தப்படும். இத்தகைய ஈத்கா அமைப்புகள் வடஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை மாவட்டங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன.

**மக்பாரா**

நல்ல செய்கைகள் மூலம் சிறப்புப்பெற்ற பெரியவர்கள், நவாபுகள் போன்ற அரசர்களின் கல்லறைகளுக்கு 'மக்பாரா' என்று பெயர். இறந்தவரின் உடல் மக்பாரா எனப்படும். சுரங்க அறையில் அடக்கம் செய்யப்படும். இந்த உண்மையான கல்லறைக்கு 'கபர்' என்று பெயர். இதன் மீது உயர்ந்த மேடை ஒன்று அமைக்கப்படும். இம்மேடையின் நடுவில், சுரங்க அறையில் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்குமேல் 'ஜரிஹா' எனப்படும் கல்லறை போன்ற நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருக்கும். இதன்மீது உயர்ந்த அறை ஒன்றை எழுப்பி அதன் நடுவில் கவிகை மாடமும் நாற்புறமும் தூபிகளும் நிறுவப்பட்டிருக்கும். தமிழகத்தில் சில கல்லறைகள் மீதுதான் கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மற்ற கல்லறைகள் யாவும் கட்டடம் இல்லாமலேயே உள்ளன. இவற்றுள் மிகச் சிறப்பானது ஆர்க்காட்டில் உள்ள நவாப் சாதத் உல்லாக்கானின் கல்லறையாகும். இக்கல்லறையும், இதன்மீது எழுப்பப்பட்டுள்ள கட்டடமும்

கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பச்சை நிறக் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. எனவேதான், இது 'பச்சைக்கல் மசூதி' என அழைக்கப்படுகிறது. மேலும் ஆர்க்காடு, வேலூர் போன்ற இடங்களில் காணப்படும் பழமையான கல்லறைகள் யாவும் இத்தகைய பச்சை நிறக் கருங்கற்களாலேயே வடிக்கப்பட்டுள்ளன. இக்கற்கள் போளூருக்கு அருகிலுள்ள தேவிகாபுரம் மலையிலிருந்து கொண்டுவரப்பட்டன.

நவாப் அன்வருதீன் கி.பி. 1749-இல் ஆம்பூருக்கு அருகிலுள்ள கெடாம்பூர் என்னுமிடத்தில் நடந்த போரில் உயிர் நீத்தார். அவருடைய கல்லறை அந்த இடத்திலேயே வழவழப்பான கருங்கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. அதன்மீது செங்கல் மற்றும் சுண்ணாம்பு கொண்டு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

## நவாபுகள் கல்லறைகள்

ஆர்க்காட்டு நவாபுகள் திருச்சி நத்தர் ஷா மீது பெரும் ஈடுபாடு கொண்டிருந்தனர். எனவே, நவாபுகள் பெரும்பாலோருடைய கல்லறைகள் யாவும் நத்தர் ஷா தர்காவிற்குள்ளேயே உள்ளன. நவாப் முகமதலி வாலாஜா சென்னையில் தாம் இறக்கும் தருவாயில் தம் உடல் திருச்சி நத்தர் ஷா தர்காவிற்குள் அடக்கம் செய்யப்பட வேண்டும் எனக் கூறியதற்கிணங்க, அவரது உடல் சென்னையிலிருந்து திருச்சிக்கு நடைப்பயணமாகவே எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த தர்காவில் அடக்கமாகியுள்ள ஆர்க்காடு நவாபுகள் (1) முகமதலி வாலாஜா (2) உம்-தத்-உல்-உமரா (3) அமிருல்-உமரா ஆகியோரும் அவர்கள் குடும்பத்தினரும் ஆவர். நவாப் சந்தாசாகிப்பின் கல்லறை இத்தர்காவின் வெளிப்புறம் உள்ளது.

## வேலூர்-திப்பு சுல்தான் குடும்பத்தினரின் கல்லறைகள்

கி.பி. 1799-இல் சீரங்கப்பட்டணம் முற்றுகையில் ஆங்கிலேயருக்கெதிராகப் படைவீரர்களுடன் ஒரு படைவீரனாக நின்று போரிட்டு வீரமரணமடைந்தான் மைசூர் மன்னன் திப்பு சுல்தான். பின்னர் ஆங்கிலேயர்கள் திப்புவின் குடும்பத்தினரையும், அமைச்சர்களையும்

வேலூருக்குக் கொண்டு வந்து குடியமர்த்தினார்கள். இவர்களுடைய கல்லறைகள் வேலூர் தினத்தந்தி அலுவலகத்திற்கு அருகில் உள்ளன. இவை யாவும் எண்கோண வடிவில் ஒன்றினுள் ஒன்றாக இரண்டு சுவர்களும், அதன் மேல் தளத்தில் இரண்டு அலங்காரத் தடுப்புச் சுவர்களும் கொண்டுள்ளன. கூரை மீது கவிகை மாடம் எழுப்பப் பட்டுள்ளது. இவற்றின் வெளிப்புறச் சுவரின் எட்டுப் பக்கங்களிலும் வளைவு அமைப்பு வாயில்கள் அழகு செய்கின்றன. உட்புறச் சுவராலான அறைக்குள் கல்லறை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மொத்தம் ஒன்பது கல்லறைகள் காணப்படுகின்றன. இவற்றுள் திப்புவின் மருமகன் ஜனாப் மிர்ஜா ரஜா ஹுசேன் கல்லறையும், திப்புவின் இந்து முதலமைச்சர் பூர்னியாவின் மகளின் கல்லறையும் மட்டும் வழவழப்பான கருங்கற்களால் அழகுற எழுப்பப்பட்டுள்ளன. மற்ற கல்லறைகள் யாவும் செங்கல்லும், சுதையும் கொண்டு கட்டப் பட்டுள்ளன. அமைச்சர் பூர்னியாவின் மகள் இந்து மதத்திலிருந்து இசுலாத்தைத் தழுவியவர். எனவே, இவருடைய கல்லறை இந்துக் கோயில்களில் காணப்பெறும் தூண்களைக் கொண்ட சாதாரண மண்டபம் போல் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தைத் தாங்கும் தூண்களும் இந்துக் கட்டடக் கலையை நினைவுறுத்துகிறது.

இங்குள்ள கல்லறைகள் பற்றிய விவரம் வருமாறு :

1 பக்ஷி பேகம்—ஹைதர் அலியின் மனைவி.
( மறைவு : கி.பி. 1808 )

2 ஜனாப் மிர்ஜா ரஜா ஹுசேன்—திப்பு சுல்தானின் மருமகன்.
( மறைவு : கி.பி. 1831 )

3 பாத்திமா பேகம்—திப்பு சுல்தானின் மகள்.
( மறைவு : கி.பி. 1835 )

4 பாதுஷா பேகம்—திப்பு சுல்தானின் மனைவி.
( மறைவு : கி.பி. 1835 )

5 திப்பு சுல்தானின் முதல் மந்திரி பூர்னியாவின் மகள்.

6 ஆப்தாப் கோஷா
7 மிஸ்கின் கோஷா
8 ஜனாப் முஸ்தபா சாஹெப்
9 ஜனாப் அன்வர் சாஹெப்

} திப்பு சுல்தானின் அரசாங்க மந்திரிகள் (6–9)

இக்கல்லறைகளில் உள்ள அரபிக் கல்வெட்டுகள் திப்புவின் வரலாற்றைப் பற்றிச் சில புதிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

(1) சீரங்கப்பட்டணத்தில் திப்புவின் கல்லறைக்குப் பக்கத்தில் அவருடைய தந்தை ஹைதர் அலியும் தாய் பக்ஷி பேகமும் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர் என வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர். ஆனால் இச்செய்தி தவறு என்பதை இங்குள்ள திப்புவின் தாயார் பக்ஷி பேகத்தின் கல்லறைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அதாவது, கி.பி. 1799-இல் திப்புவின் இறப்புக்குப் பின்னர், பக்ஷி பேகம் தம் குடும்பத்தினருடன் வேலூருக்குக் கொண்டுவரப்பட்டு, கி.பி. 1808-இல் வேலூரில் இறந்தார் என்பதே உண்மையான செய்தி.

(2) அதேபோன்று திப்புவின் மகள் பாத்திமா பேகத்தின் கல்லறையும் சீரங்கப்பட்டணத்தில் திப்புவின் கல்லறை உள்ள கட்டடத்தின் மாடியில் உள்ளது எனக் கூறப்படுகிறது. இதுவும் தவறு. பாத்திமா பேகமும், அவர் கணவர் மிர்ஜா ரஜா உசேனும் வேலூரில் முறையே கி.பி. 1835, 1831-இல் இறந்துள்ளார்கள். அவர்களுடைய கல்லறைகளும் இங்குதான் உள்ளன.

(3) திப்பு சுல்தானின் மனைவியின் இயற்பெயர் ருக்குயா பானு என்றும், திருமணத்திற்கு பிறகு இவர் பாதுஷா பேகம் என மதிப்புடன் அழைக்கப்பட்டார் எனவும் வரலாறு கூறுகிறது. சீரங்கப்பட்டணத்திலுள்ள கல்லறைக் கல்வெட்டு, 'ருக்யா பேகம்-திப்புவின் மனைவி' என மட்டும் தெரிவிக்கிறது. இவர் திப்புவிற்கு முன்பு கி.பி. 1792-இல் இறந்துவிடுகிறார். வேலூரிலுள்ள கல்லறைக் கல்வெட்டு, 'பாதுஷா பேகம்-திப்புவின் மனைவி-மறைவு கி.பி. 1835' எனக் குறிக்கிறது. இதிலிருந்து திப்புவிற்கு ருக்யா பானு, பாதுஷா பேகம் என இரு மனைவியர் இருந்தனர் எனத் தெரிகிறது.

# இசுலாமியர் காசுகள்

# இசுலாமியர் காசுகள்

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த அலாவுதீன் கில்ஜி என்பவரே தமிழகத்தின் மீது படையெடுத்த முதல் இசுலாமிய மன்னராவார். இவருடைய படைத் தளபதி மாலிக்காபூர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி அங்கு இசுலாமியர்களின் ஆட்சியை ஏற்படுத்தினார். மதுரையை ஆட்சி புரிய ஜலாலுதீன் என்பவர் டெல்லி சுல்தானின் ஆளுநராக நியமிக்கப் பட்டார். இக்காலத்தில் டெல்லி சுல்தான்களின் காசுகள் பாண்டிய நாட்டில் புழக்கத்தில் இருந்தன.

டெல்லிப் பேரரசின் வலிமை குன்றியவுடன் கி.பி. 1333-இல் ஜலாலுதீன் தன்னைச் சுதந்திர மன்னராக அறிவித்துக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினார். இவர்தான் தமிழகத்தில் இசுலாமியர் காசுகளை வெளியிட்ட முதல் மன்னராவார். இவர் கி.பி. 1335 முதல் தங்கம், வெள்ளிக் காசுகளை வெளியிட்டார். இவர் வெளியிட்ட தங்கக் காசுகளில்

"சலத தாஹா வ யாசீன் அபூ முஜ்பர்
அல் - மகாகீன் ஜலாலுத் துனீயல்வ - அல்தீன்"

என்னும் அராபிய வாசகம் பொறிக்கப்பட்டிருந்ததாக இபன் பதூதா குறிப்பிடுகிறார். ஆனால் இவ்வகைக் காசுகள் யாதும் இதுவரை கிடைக்கவில்லை. மேற்கூறப்பட்ட வாசகத்தின் தமிழாக்கம் வருமாறு :

"தாஹா, யாசீன் மரபில் வந்தவர்; ஏழைகளுக்கு
தந்தை போன்று எளிமையானவர் ஜலாலுத்தினீயாவதீன்".

ஜலாலுதீனைத் தொடர்ந்து குத்புதீன், கியாதுடீன், நசிருதீன், அதில்ஷா, பக்ருதீன் முபாரக்ஷா, அல்லாதீன் சிக்கந்தர்ஷா போன்ற மதுரைச் சுல்தான்களும் தங்கள் பெயரில் காசுகள் வெளியிட்டனர். இவர்களின் காசுகள் யாவும் வட்ட வடிவமானவை. இவை இருவகைப்படும்.

முதல் வகை :

முன்புறம் : ஒரு வட்டத்திற்குள் சுல்தானின் பெயரும், ஓரத்தில் அரேபிய எழுத்துக்களில் ஹிஜிரி ஆண்டும் பொறிக்கப்பட்டிருக்கும்.

பின்புறம் : சுல்தானின் பட்டப் பெயர்.

இரண்டாவது வகை :

முன்புறம் : சுல்தானின் பட்டப் பெயர்.

பின்புறம் : சுல்தானின் சொந்தப் பெயர் மற்றும் ஹிஜிரி ஆண்டு.

இசுலாமியர்கள் தங்கக் காசுகளை "மொஹர்" என்றும்; வெள்ளிக் காசுகளை "பதர்" என்றும்; செப்புக் காசுகளை "தங்கா" என்றும் அழைத்தனர். பொதுவாக இசுலாமிய மன்னர்கள் வெளியிட்ட காசுகளின் ஒருபுறம் 'கலிமா'வும், மறுபுறம் மன்னரின் பெயரும், ஹிஜிரி ஆண்டும் பொறிக்கப்பட்டிருக்கும்.

ஆர்க்காடு நவாபுகள், சாதத்துல்லாகான் காலம் முதல் தொடர்ந்து காசுகள் வெளியிட்டு வந்தனர். நவாப் அன்வருதீன் காலம் வரை இவர்கள் டெல்லி மொகலாயர்களுக்கு அடங்கிய ஆட்சியாளர்களாக விளங்கினார்கள். எனவே இவர்கள் தம் பெயரில் காசுகள் வெளியிடவில்லை. பொதுவாக "அன்" "இல்லாஹ்" என்ற பெயர் பொறித்துக் காசுகள் வெளியிட்டனர். அன்வருதீனின் மகனாகிய நவாப் முகமதலி வாலாஜாவின் காலத்தில்தான் நவாப் பெயர் பொறித்த காசுகள் வெளியிடப்பட்டன. இவை வாலாஜாஹி, கர்கி, உம்-தத்-உல்-முல்க், ஸ்டார், பறங்கிப்பேட் என்று பல பெயர்களில் வெளியிடப்பட்டன. இவற்றில் முகமதலியின் பெயர் பாரசீக மொழியிலும், ஹிஜிரி ஆண்டும் பொறிக்கப்பட்டன. "வாலாஜா" எனத் தமிழில் பொறிக்கப்பட்ட காசுகளும் கிடைத்துள்ளன. இத்தகைய காசுகள் ஆர்க்காடு, பறங்கிப்பேட்டை, திருச்சி திருவாமூர் ஆகிய இடங்களிலிருந்து அச்சிட்டு வெளியிடப்பட்டன. மேலும், இவர்கள் காலத்தில் டெல்லியின் இறுதி முகலாயப் பேரரசர்கள் முகமதுஷா மற்றும் இரண்டாம் ஆலம்கீர் ஆகியோரின் பெயர் பொறித்த காசுகளும் புழக்கத்திலிருந்தன. இக்காசுகள் யாவும் கிழக்கிந்தியக் கம்பெனியாரால், ஆர்க்காட்டு நாணயச்சாலையின்

பெயரில் வெளியிடப்பட்டவையாகும். இவ்வாறு வெளியிடப்பட்ட வெள்ளிக் காசுகள் 'ஆர்க்காடு வெள்ளி' எனவும் செப்புக் காசுகள் 'ஆர்க்காடு ரூபாய்' எனவும் அழைக்கப்பட்டன. இத்தகைய ஆர்க்காடு ரூபாய்களைத் தமிழகத்திலிருந்த பாளையக்காரர்கள், ஜாகீர்தாரர்கள், ஜமீன்தாரர்கள் போன்றோர் ஆர்க்காடு நவாபுகளுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் திறைப்பணமாகக் கொடுத்துள்ளனர் என்பதை மெக்கன்சி சுவடிகள் மூலம் அறியலாம். இவ்வகைக் காசுகள், ஆர்க்காட்டு நாணயச் சாலையின் பெயரால் முதலில் சென்னையிலிருந்தும் (தங்கசாலை) பின்னர் சென்னை, கல்கத்தா ஆகிய இரு இடங்களிலிருந்தும் வெளியிடப்பட்டன. இவற்றில் சென்னையில் அச்சிடப்பட்டதற்கு அடையாளமாகத் திரிசூலச் சின்னமும், கல்கத்தாவில் அச்சிடப்பட்டதற்கு அடையாளமாக ரோஜாப்பூச் சின்னமும் பொறித்தார்கள்.

பின்னர் ஆர்க்காடு ரூபாய்களுடன் செப்பு இருபது, பத்து, ஐந்து, இரண்டரை காசுகளையும் நவாபுகள் பெயரில் கம்பெனியார் வெளியிட்டனர். இவற்றில் ஒருபுறம் பாரசீக மொழியில் காசின் மதிப்பும், மறுபுறத்தில் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் காசின் மதிப்பும் பொறிக்கப்பட்டிருக்கும்.

நவாப் உம்-தத்-உல் உமரா இறந்தவுடன், கருநாடகத்தின் ஆட்சிப் பொறுப்பையும் கிழக்கிந்தியக் கம்பெனியாரே ஏற்றுக் கொண்டனர். இதன் பின்னர் இவர்கள் கருநாடகத்தில் தம் ஆட்சியைக் குறிக்கும் வகையில் தங்களுடைய கம்பெனிச் சின்னம் பொறித்த ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து, இருபது காசுகளை கி.பி. 1803 முதல் வெளியிட்டனர். இவற்றின் ஒருபுறம் கிழக்கிந்திய கம்பெனியாரின் சின்னமும் அதன் கீழ் ஆங்கிலத்தில் அக்காசின் மதிப்பும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறத்தில், நவாபின் ஆட்சி பெயரளவில் தொடர்ந்து இருப்பதைக் குறிக்கும் வகையில் உருது எழுத்துக்களில் அக்காசின் மதிப்பும் காணப்படும்.

பின்னர் கி.பி. 1835 முதல் கிழக்கிந்திய கம்பெனியார் தம் பெயரில் வேறு வகையில் காசுகளை வெளியிட்டனர். இவற்றின் ஒருபுறம் கம்பெனியின் சின்னமும், ஆண்டும்; மறுபுறம் ஆங்கிலத்தில் Half anna, Quarter anna என்றும், உருதில் சிறியதாக அரையணாவிற்கு 'தோ-பாய்' என்றும், காலணாவிற்கு 'ஏக்-பாய்' என்றும் பொறிக்கப்பட்டிருக்கும்.

கிழக்கிந்தியக் கம்பெனியார், முதலில் முகலாயப் பேரரசர் ஆலம்ஷா காலத்தில் அவர் வெளியிட்ட காசுகளைப் போலவே தாமும் கள்ளத்தனமாக அச்சிட்டு அவற்றைத் தம் வாணிபத்திற்காகப் பயன்படுத்தினர். பின்னர், கி.பி. 1772-இல் முகலாயப் பேரரசன் இரண்டாம் ஆலம்கீரிடமிருந்து அனுமதி பெற்று, அவர் பெயரையும், ஹிஜிரி ஆண்டையும் பொறித்துக் காசுகளை வெளியிட்டனர். அதற்குப்பின், நவாப் முகமதலி கம்பெனியாரின் பாதுகாப்பில் சென்னைக்குக் குடியேறிய பின்பு உருது, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் அக்காசின் மதிப்பைப் பொறித்து வெளியிட்டனர்.

பின் நவாப் அசிம்-உத்-தௌலாவை பெயரளவில் ஆட்சியாளராக வைத்துக்கொண்டு கருநாடகத்தின் முழு ஆட்சிப் பொறுப்பையும் தாம் ஏற்றுக்கொண்டபின், கம்பெனியின் சின்னம் மற்றும் ஆங்கில ஆண்டு ஒருபுறமும், மறுபுறம் உருது மொழியில் காசின் மதிப்பும் பொறித்து வெளியிட்டார்கள். கி.பி. 1835 முதல் கி.பி. 1857 வரை தமிழகம் முழுவதையும் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்த பின்பு ஒருபுறம் தம் கம்பெனி சின்னமும், ஆண்டும் மறுபுறம் ஆங்கிலத்தில் காசின் மதிப்பும் பொறித்துக் காசுகள் வெளியிட்டார்கள். கி.பி. 1857-இல் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பைக் கம்பெனியிடமிருந்து ஆங்கிலேய அரசாங்கம் பெற்றுக்கொண்டது. இதன்பின், இங்கிலாந்து நாட்டு அரசி அல்லது அரசர் உருவம் பொறித்த காசுகள் வெளியிடப்பட்டன.

இவ்வாறு நம்மோடு வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் எவ்வாறு நம்மையே தம் ஆட்சிக்குட்படுத்தினார்கள் என்பதை அறிவதற்குப் பல்வேறு காலகட்டங்களில் அவர்கள் வெளியிட்ட காசுகளும் தெளிவான, தொடர்ச்சியான சான்றுகளைக் கொடுக்கின்றன.

இதுவல்லாமல் மைசூர் மன்னன் திப்பு சுல்தான் காசுகளும், ஹைதராபாத் நிஜாம்-உல்-முல்கின் சார்மினார் உருவம் பொறித்த நிக்கல் காசுகளும் தமிழகத்தில் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் புழக்கத்திலிருந்தன.

# இசுலாமியரின்
# தமிழ் இலக்கியத் தொண்டு

# இசுலாமியரின் தமிழ் இலக்கியத் தொண்டு

இசுலாமியர்கள் தமிழ் இலக்கியத்திற்குப் பெருந் தொண்டாற்றி உள்ளனர். இந்துக்கள் போன்றே இசுலாமியர்களும் தம் இலக்கியங்களை இசுலாமிய சமயக் கொள்கைகளை அடிப்படையாக வைத்தே இயற்றினார்கள். தமிழ் உலகிற்கு அவர்கள் அளித்த இலக்கியங்கள் பற்றிய விவரம் வருமாறு :

## I இசுலாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்

| வ. எண். | நூலின் பெயர் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| 1 | ஞானப் புகழ்ச்சி | பீர் முகமது அப்பா | கி.பி. 17 |
| 2 | ஞானமணி மாலை | ,, | ,, |
| 3 | குருபர தோத்திரம் | குணங்குடி மஸ்தான் | கி.பி. 18 |
| 4 | முகையித்தின் சதகம் | ,, | ,, |
| 5 | கொச்சகக் கவிகள் | ,, | ,, |
| 6 | அகத்தீசர் சதகம் | ,, | ,, |
| 7 | கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | ,, | ,, |
| 8 | கட்டளைக் கலித்துறைகள் | ,, | ,, |
| 9 | ஆனந்தக் களிப்பு | ,, | ,, |
| 10 | பராபரக் கண்ணி | ,, | ,, |
| 11 | நிராமயக் கண்ணி | ,, | ,, |
| 12 | ரகுமான் கண்ணி | ,, | ,, |
| 13 | எக்காளக் கண்ணி | ,, | ,, |
| 14 | கண்மணிமாலைக் கண்ணி | ,, | ,, |
| 15 | மனோன்மணிக் கண்ணி | ,, | ,, |
| 16 | நந்தீஸ்வரக் கண்ணி | ,, | ,, |
| 17 | கீர்த்தனங்கள் | ,, | ,, |
| 18 | திருப்பாடல் திரட்டு | கோட்டாறு ஞானியார் சாகிபு வலி | ,, |
| 19 | உலுமுத்தீன் | கல்வாத்து நாயகம் | கி.பி. 19 |
| 20 | மச்சரேகை சித்தர் திருப்பாடல் | மச்சரேகை சித்தர் | ,, |
| 21 | வேதாந்த ரத்தினம் | சைகு முகமது மதினா சாகிப் | ,, |
| 22 | மெய்ஞ்ஞான சுயம் ஜோதி | ,, | ,, |

| வ. எண். | நூலின் பெயர் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| 23 | மோனகுரு மஸ்தான் சாகிப் பாடல்கள் | மோனகுரு சேகு | கி.பி. 19 |
| 24 | மெய் ஞானத் திருப்பாடல் திரட்டு | அப்பா நாயகம் | ,, |
| 25 | ஞான கமலமணி மாலை | ,, | ,, |
| 26 | ஞான அலங்காரம் | ,, | ,, |
| 27 | ஞான அற்புதம் | ,, | ,, |
| 28 | ஞான வேதாந்தம் | ,, | ,, |
| 29 | சமரச சின்மயானந்த ஞான மூப்பு | ,, | ,, |
| 30 | மெய்ஞான ஆனந்த களிப்பு | சைகு உதுமான் வலி | ,, |
| 31 | மெய்ஞானச் சதகம் | ,, | ,, |
| 32 | குறமாது | மீரான்கனி அண்ணாவியார் | ,, |
| 33 | வேத புராணம் | நூகு வலி | ,, |

## II இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சீறாப்புறாணம் | உமறுப் புலவர் | கி.பி. 17 |
| 2 | சின்னச்சீறா | பணிஅகமது மரக்காயர் | கி.பி. 18 |
| 3 | குத்துபுநாயகம் | சேகுனாப் புலவர் (புலவர் நாயகம்) | ,, |
| 4 | திருக்காரணப் புராணம் | ,, | ,, |
| 5 | திருமணி மாலை | ,, | ,, |
| 6 | புதூகுஷ்ஷாம் | ,, | ,, |
| 7 | இராஜநாயகம் | ஹமீது இபுராகீம் புலவர் (வண்ணக்களஞ்சியப் புலவர்) | ,, |
| 8 | தீன்விளக்கம் | ,, | ,, |
| 9 | குத்புநாயகம் | ,, | ,, |
| 10 | முகியித்தீன் புராணம் | பதுறுத்தீன் புலவர் | ,, |
| 11 | நவமணி மாலை | ஐதுறூசு நயினார் புலவர் | ,, |
| 12 | திருமணக் காட்சி | சேகாதி நயினார் புலவர் | ,, |
| 13 | ஆரிபுநாயகம் | குலாம் காதிறு நாவலர் | ,, |
| 14 | நாகூர்ப் புராணம் | ,, | ,, |

## III இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்

| வ. எண். | நூலின் பெயர் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| | **1. மாலை** | | |
| 1 | மீராஜ் மாலை | அலிப்புலவர் | கி.பி. 16 |
| 2 | முதுமொழி மாலை | உமறுப்புலவர் | கி.பி. 17 |
| 3 | கனகாபிஷேக மாலை | செய்கு நாயினார் (கனகக் கவிராயர்) | ,, |
| 4 | பொன்னரிய மாலை | மதுரை மின்னா நூறுத்தின் | கி.பி. 19 |
| 5 | கல்வாத்துநாயகம் இன்னிசைப் பாமாலை | கல்வாத்து நாயகம் | ,, |
| 6 | அடைக்கல மாலை | அப்துல் காதிறுப் புலவர் | ,, |
| 7 | பேரின்ப ரஞ்சித மாலை | ,, | ,, |
| 8 | அருண்மணி மாலை | ,, | ,, |
| 9 | திருமதீனத்து மாலை | பிச்சை இப்ராகிம் புலவர் | ,, |
| 10 | மகபூப் சுப்கானி மாலை | ,, | ,, |
| 11 | முகியித்தீன் ஆண்டவர் மாலை | ,, | ,, |
| 12 | வெள்ளாங்குளத்தூர் அவுலியா மாலை | ,, | ,, |
| 13 | பஹ்தாதுப் பாமாலை | ,, | ,, |
| 14 | நான்மணி மாலை | ,, | ,, |
| | **2. திருப்புகழ்** | | |
| 1 | காசிம் திருப்புகழ் | காசிம் புலவர் | கி.பி. 19 |
| 2 | நவரத்தினத் திருப்புகழ் | அசனா லெப்பைப் புலவர் | ,, |
| 3 | சந்தத் திருப்புகழ் | அப்துல் காதிர் புலவர் | ,, |
| 4 | முகியித்தீன் ஆண்டவர் திருப்புகழ் | சையிது முகியித்தீன் கவிராயர் | ,, |

| வ. எண். | நூலின் பெயர் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| | **3. கலம்பகம்** | | |
| 1 | மக்காக் கலம்பகம் | சேக் அப்துல் காதிர் நயினார் | கி.பி. 18 |
| 2 | நாகைக் கலம்பகம் | சவ்வாதுப் புலவர் | ,, |
| 3 | குவாலீர்க் கலம்பகம் | குலாம் காதிர் புலவர் | கி.பி. 19 |
| 4 | நாகூர்க் கலம்பகம் | ,, | ,, |
| 5 | பகுதாதுக் கலம்பகம் | ,, | ,, |
| 6 | பதாயிகுக் கலம்பகம் | ,, | ,, |
| | **4. பிள்ளைத்தமிழ்** | | |
| 1 | முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் | சவ்வாதுப் புலவர் | கி.பி. 18 |
| 2 | நபிநாயகம் பிள்ளைத்தமிழ் | செய்யது அளபியா சாயிபு | கி.பி. 19 |
| 3 | நத்தர்வலி பிள்ளைத்தமிழ் | திருச்சி பிச்சை இபுராகீம் புலவர் | ,, |
| 4 | நாகூர் பிள்ளைத்தமிழ் | ,, | ,, |
| 5 | முகியித்தீன் பிள்ளைத்தமிழ் | சையிது முகியித்தீன் | ,, |
| 6 | பாத்திமா நாயகி பிள்ளைத்தமிழ் | சைகு மீரான் புலவர் | கி.பி. 20 |
| | **5. கோவை** | | |
| 1 | ஆசாரக் கோவை | அப்துல் மஜீது | கி.பி. 19 |
| 2 | சம்சுத்தாசீன் கோவை | சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் | கி.பி. 20 |
| | **6. அந்தாதி** | | |
| 1 | திருமதீனத்தந்தாதி | பிச்சை இபுராகீம் புலவர் | கி.பி. 19 |
| 2 | திருமக்காத்திரிபந்தாதி | குலாம் காதிறு நாவலர் | ,, |
| 3 | நாகை அந்தாதி | புலவர் நாயகம் (சேகுனாப் புலவர்) | ,, |

L... Y,

## IV இசுலாமியப் புலவர்கள் படைத்த புதுவகைச் சிற்றிலக்கியங்கள்

தமிழ்ப் புலவர்கள் பாடாத புதுவகைச் சிற்றிலக்கியங்களையும் இசுலாமியப் புலவர்கள் சிறப்பாகப் படைத்துத் தமிழ் மொழிக்கு அணி சேர்த்துள்ளனர். அவை கீழ்வருமாறு :

1 கிஸ்ஸா (கதை சொல்லுதல்)
2 படைப்போர் (பரணி)
3 மஸ்ஸா (வினாத் தொடுத்தல்)
4 முனாஜாத் (இரகசியம் பேசுதல்)
5 நாமா (கதை வரலாறு நூல்)

## V இசுலாமிய நாடகத் தமிழ் நூல்கள்

1 அப்பாஸ் நாடகம்
2 அலிபாதுஷா நாடகம்
3 தையார் சுல்தான் நாடகம்
4 லால் கௌஹர் நாடகம்
5 அலாவுதீன் நாடகம்
6 கபுகாபு நாடகம்
7 காந்தரூபி நாடகம்

## VI இசுலாமிய இசைத்தமிழ் நூல்கள்

1 சீறாக் கீர்த்தனை
2 சுகிர்த மெய்ஞ்ஞான சங்கீர்த்தனம்
3 சங்கீத சிந்தாமணி
4 நவரச கீர்த்தனாலங்காரம்
5 சங்கீர்த்தன மஞ்சரி
6 காரண மாலை
7 பூவடி சிந்து
8 ஒலிநாயகர் அவதாரச் சிந்து
9 பயகாம்பர் அவதார பலவண்ணச் சிந்து

10 நவநீதரத்ன அலங்காரச் சிந்து

11 நொண்டிச் சிந்து

12 சிங்காரக்கும்மி

13 சிங்கார வழிநடன பாவனி

14 நபியுல்லா பேரில் கும்மிப் பாட்டு

15 தீன் விளக்கக் கும்மி

16 மீன் வேட்டைக் கும்மி

17 ஞானப் பெண் கும்மி

18 அலங்கார கும்மி

19 கீழக்கரை மாப்பிள்ளை லப்பை ஆலிமின் சீவிய சரித்திரக் கும்மி

20 தாய் மகள் ஏசல்

21 ஞானத் தாய் மகள் ஏசல்

# அகழ்வைப்பகம்

# அகழ்வைப்பகம்

சங்க காலம் முதலே தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்ட அராபியர்கள் நாளடைவில் தம் சமயமான இசுலாத்தைத் தமிழகத்தில் பரப்பியதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தை ஆட்சி புரிந்து நல்ல பல சாதனைகளையும் புரிந்துள்ளனர். அவர்களுடைய வரலாற்றைத் தொடர்ச்சியாக அறியும்வண்ணம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை ஆர்க்காட்டில் ஓர் அகழ்வைப்பகத்தை அமைத்துள்ளது.

இவ்வகழ்வைப்பகம் இசுலாமியர்களுக்கு முந்திய காலக் (Pre-Islamic Period) கலைப்பொருட்கள், இசுலாமியர் காலக் (Islamic Period) கலைப்பொருட்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதற் பிரிவில் சங்க காலம் முதல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை உள்ள ஆர்க்காட்டின் வரலாற்றை விளக்கும் வரலாற்றுக் குறிப்புகளும், ஆர்க்காட்டைச் சுற்றியுள்ள இடங்களி லிருந்து சேகரிக்கப்பட்ட அக்காலத்திய கலையழகு வாய்ந்த கற்சிலை களும், சுடுமண் பாவைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பிரிவில் நவாபுகள் காலமான கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல் பொருட்களும், நவாபுகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. இத்துடன் இசுலாமியர்களின் தொன்மையான அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள், தர்காக்கள், நவாபுகளின் உருவப்படங்கள் ஆகியவற்றின் ஒளிப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆர்க்காடு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல் பொருட்கள் குறித்த விவரம் வருமாறு :

## கற்சிற்பங்கள்

(1) **வினாயகர் (தாழனூர்)** : அமர்ந்த நிலையில் உள்ள இச்சிற்பம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தலையில் கரண்ட மகுடமும், வலது மேற்கரத்தில் அங்குசமும், இடமேற் கரத்தில் பாசமும், கழுத்தில் ஆரமும், புரிநூலும் அணிசெய்கின்றன. **துதிக்கையின்** நுனிப் பகுதியும் கீழ்க்கரங்களும் உடைந்துள்ளன.

(2) **மூத்த நங்கை (சேக்கசில் குளம்) :** சுமார் 96 செ.மீ. நீளமும், 50 செ.மீ. அகலமும் உடைய இச்சிற்பம் கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலப் பல்லவர்கள் கலைப்பாணியைக் கொண்டுள்ளது. இச்சிற்பத்தின் முகம் திருத்தம் (Recut) செய்யப் பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பிரேத குண்டலங்களும் அணிந்து வயிறு சற்று புடைத்த நிலையில், கால்களை அகன்றவாறு வைத்து அமர்ந்துள்ளார். வலப்புறத்தில் இந்நங்கையின் மகனாகிய குளிகன் கையில் தண்டு ஏந்தியுள்ளார். இடத்தோளுக்கு மேலே ஒரு நாயும், அதற்குக் கீழே இவளது மகளாகிய மாந்தியும் காணப்படுகின்றனர். மூத்த நங்கையின் இரு கைகளும் இரு அரக்கர்களின் தலைமுடியைப் பிடித்த நிலையில் உள்ளன.

(3) **புத்தர் (எசையனூர்) :** கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கலைப்பாணியில் அமைந்த இச்சிற்பம் 72 செ.மீ. உயரமும் 61 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. பத்மாசன முறையில் கைகளும் கால்களும் வைத்து அமர்ந்துள்ள இச்சிற்பம் காதுகளில் பத்திர குண்டலங்களும் நெஞ்சில் திருமருவும் பெற்று மிகுந்த கலையழகுடன் காட்சியளிக்கிறது.

(4) **துர்க்கை (பூண்டி மலைமேடு) :** இச்சிற்பம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில் ஆரமும் அணிந்துள்ள தேவியின் மேலிரு கரங்களில் சங்கும் சக்கரமும் அழகு செய்கின்றன. வலது காலைத் தரையில் ஊன்றி நின்றவாறு உள்ள அன்னையின் இடது கால் எருமை அரக்கனின் தலைமீது வைத்து அழுத்துகிறது. இடது கீழ்க்கரம் தொடை மீது வைத்துள்ளது. வலது கீழ்க்கரத்திலுள்ள சூலம் அரக்கனின் முகத்தைக் குத்துகிறது. 60 செ.மீ. நீளமும் 35 செ.மீ. அகலமும் உள்ள இச்சிற்பத்தின் வலப்பக்கம் சிறிய அளவில் சிம்மம் உள்ளது.

(5) **பைரவர் (நந்தியாலம்) :** இடுப்புப் பகுதிக்குக் கீழ் உள்ள இச்சிற்பம் மிக அழகாகவும் சிறியதாகவும் அமைந்துள்ளது. பைரவருக்குப் பின்புறம் உள்ள நாயின் முகப்பகுதி உடைந்துள்ளது.

இடுப்பில் நாகபந்தம் அணி செய்கிறது. ஆடையின்றி நின்ற நிலையிலுள்ள இச்சிற்பம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் சோழர் காலக் கலைப் படைப்பாகும். இது 36 செ.மீ. உயரமும் 33 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது.

(6) **நந்தி (திமிரி)** : கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கலைப் படைப்பான இந்நந்தி சிறியதாக மிகுந்த எழிலுடன் காட்சியளிக்கிறது. குறுங்கொம்புகளுடன் கழுத்தில் இரு மணிச் சரங்களும், நெஞ்சில் மார்புப் பட்டையும் அணிந்துள்ள இதன் இடக்கால் சிறிது உடைந்துள்ளது. இது தன் முன் வலக்காலை உட்பக்கமாக மடித்து அமர்ந்துள்ள நிலை போற்றத் தகுந்தது. இது 63 செ.மீ. நீளமும், 43 செ.மீ. உயரமும் கொண்ட அளவுடையதாகும்.

(7) **வினாயகர் (குறுமுடித்தாங்கல்)** : இச்சிற்பம் நாயக்கர் காலமான கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தலைப்பகுதி, கீழ்க்கரங்கள், துதிக்கையின் நுனிப்பாகம் போன்றவை சிதைந் துள்ளன. வலமேற்கரம் அங்குசத்தையும், இடமேற்கரம் பாசத்தை யும் கொண்டுள்ள இச்சிற்பம் மிக்க கலை வேலைப்பாடுடையதாகும். இது 75 செ.மீ. நீளமும், 53 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது.

(8) **துர்க்கை (திமிரி)** : சுமார் 54 செ.மீ. நீளமும் 20 செ.மீ. அகலமும் உடைய இச்சிற்பம் இடுப்பளவில் இரண்டாக உடைந் துள்ளது. இது சிறிய சிற்பமாகக் காணப்பட்டாலும், கலையழகு மிக்கு விளங்குகிறது. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில் வேலைப்பாடுடன் கூடிய ஆரமும் அணிந்து, மேற்கரங்களில் சங்கும் சக்கரமும் கொண்டு, கீழ் வலக் கரத்தை அபய முத்திரையிலிருத்தி, இடது கரத்தைத் தொடை மீது அமர்த்தியுள்ள காட்சி கண்டு களிக்கத் தக்கதாகும். அன்னையின் இடுப்பில் வேலைப்பாடு மிகுந்த ஆடை அழகு செய்கிறது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

## சுடுமண் பாவைகள்

சுடு மண்ணால் பொம்மைகள் செய்யும் வழக்கம் இன்றைக்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இச்சுடுமண் பொம்மைகள் முனீச்சுரன், அய்யனார், வேடியப்பன் போன்ற கிராம

தெய்வங்களின் வழிபாட்டிற்காகவும், வேண்டுதலுக்காகவும் செய்து வைக்கப்பட்டன. மேலும் இவை விளையாடுவதற்காகவும், வீடுகள் அரண்மனைகள் போன்றவற்றில் அழகுக்காகவும் செய்து வைக்கப் பட்டன. ஆர்க்காடு அருங்காட்சியகத்தில் சோழர் காலத்தைச் சேர்ந்த யாளியின் அழகிய சுடுமண் உருவம் ஒன்றும், கி.பி. 17 முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலத்தைச் சேர்ந்த கலையழகு வாய்ந்த சுடுமண் பொம்மைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டம் இராஜாளி விடுதி என்னுமிடத்திலிருந்து சேகரித்து வரப்பட்ட நாயக்கர் காலப் பெண் உருவங்களின் கொண்டையழகும், உருவ அமைப்பும், அணிகளின் வனப்பும், ஆண் வீரர்களின் முடியழகும், வீரம் பொருந்திய உருவ அமைப்பும், முறுக்கிவிடப்பட்ட மீசையும் இயற்கைத் தன்மையுடன் வடிக்கப் பட்டுள்ள கலையழகும் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும்.

வட ஆர்க்காடு மாவட்டம் வேட்டவலம் என்னுமிடத்திலிருந்து சேகரித்து வரப்பட்ட கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அம்மன் உருவமும், பாவை விளக்கும் கலைச்சிறப்பு வாய்ந்தவை.

தியாகதுர்க்கத்தில் கிடைத்த சுருள் முடியும், எடுப்பான நாசியும், உப்பிய கன்னங்களும் கொண்டு விளங்கும் ஆங்கிலேயனின் (கி.பி. 18-ஆம் நூற்றாண்டு) சுடுமண் உருவம் போற்றத்தகுந்தது.

வாலாசா வட்டம் மகிமண்டலம் கோட்டையிலிருந்து எடுத்து வரப்பட்ட இசுலாமிய வீரனின் உருவம் முக்கியமானது. இசுலாமிய பாணியிலான தொப்பி அணிந்து, அராபியர் பாணியில் மீசையைக் கீழே இறக்கிக் கூறிய மூக்கும், ஒட்டிய கன்னங்களும் கொண்டு விளங்கும் இவ்வுருவம் சிறப்பானதாகும். கி.பி. 17-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த அமர்ந்த நிலையில் உள்ள குரங்கின் சுடுமண் உருவம் காண்போர் கருத்தைக் கவரும் வண்ணம் உள்ளது.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு சுடுமண் உருவங்கள் கலைச் சிறப்பு வாய்ந்தவை. அழகிய முடி அலங்காரமும், உப்பிய கன்னங்களும், எடுப்பான நாசியும், மயக்கும் கண்களும் உடைய இவ்வுருவங்கள் ஐரோப்பியக் கலைத் தாக்கம் கொண்டு

விளங்குகின்றன. இவை சதுரமான தூணைச் சுற்றிக் கூரையைத் தாங்குவது போன்று அழகிற்காக வைக்கப்படும் பொம்மைகளாகும். இவை ஆர்க்காடு தியாகராசர் தெருவிலுள்ள பழைய மண்டபத்தின் அருகிலிருந்து சேகரிக்கப்பட்டவையாகும்.

**சுடுமண் குழாய் :** திமிரி கோட்டை மேட்டில் உள்ள ஆர்க்காடு நவாபுகள் காலத்தைச் சேர்ந்த மசூதியின் மொட்டை மாடியில் தேங்கும் மழை நீர் வெளியேறுவதற்காக வைக்கப்பட்ட குழாய் இது. இம்மசூதியின் மொட்டைமாடிச் சுவர் இடிந்தபோது, இச்சுடுமண் குழாயும் கீழே விழுந்துள்ளது. இதன் ஒருபுறம் சற்று கூம்பியும், மறுபுறம் அகலமாகவும் உள்ளது. கூம்பியுள்ள பகுதியில் கோடு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

**பிற சுடுமண் பொருட்கள் :** இசுலாமியர்கள் பயன்படுத்திய "உக்கா" எனப்படும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுடுமண் புகைப்பான்களும், சாம்பிராணி தூப கலயம் ஒன்றும், பண்டைய சுடுமண் கலயங்கள் இரண்டும், ஆர்க்காடு அருங்காட்சி யகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## மரச் சிற்பங்கள்

மரத்தால் சிற்பங்கள் செய்யும் பணி தொன்றுதொட்டு வந்த கலையாகும். பழங்காலத்தில் கோயில்கள், அரண்மனைகள் போன்றவற்றின் வாயிற்கதவுகளும், தூண்களும், விட்டங்களும் மரத்தால் செய்யப்பட்டு அவற்றில் கலையழகு வாய்ந்த சிற்பங்கள் வடிக்கப்பட்டன. குறிப்பாகக் கோயில் தேர்களை மரத்தால் செய்து, பலவகைப் புராணக் காட்சிகளை மரச்சிற்பங்களாக வடித்து அவற்றில் பொருத்தினார்கள். இத்தகைய மரத்தேர்கள் தமிழக மெங்கும் உள்ளன.

ஆர்க்காடு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தேர்ச் சிற்பம் ஒன்றில், முனிவர் ஒருவர் நின்ற கோலத்தில் காட்டப் பட்டுள்ளார். முனிவரின் வலது கை அபய முத்திரையில் உள்ளது. இடது கையில் தாமரைத் தண்டைப் பிடித்துத் தோளில் சாய்த் துள்ளார். கொண்டையிட்ட உயர்ந்த முடியும், நீண்ட தாடியும்,

மீசையும் பெற்றுள்ளார். இடது தோளில் புரிநூலும், இடையில் கோவணமும் அணிந்துள்ளார். முனிவரின் இருபுறமும் இரண்டு கும்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. முனிவரின் சிற்பம் ஓர் அழகிய மாடத்துள் காட்டப்பட்டுள்ளது. இம்மாடத்தின் மேற்புற வளைவு அமைப்பு இசுலாமியக் கட்டடக்கலையின் வளைவைப் போன்று காணப்படுகிறது. தமிழ்நாட்டுச் சிற்பக் கலையில் இசுலாமியக் கட்டடக்கலையின் தாக்கம் ஊடுருவி இருப்பதற்கு இச்சிற்பம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

அடுத்துள்ள, மயில்மீதமர்ந்த சுப்பிரமணியர், மற்றும் அமர்ந்த நிலையில் உள்ள நகைக்கும் மனிதன் ஆகிய மரச் சிற்பங்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் சிறந்த கலைப் படைப்புகளாகும். இவை ஆர்க்காடு காசிவிஸ்வநாதர் ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்டவை.

## இரும்புப் பொருட்கள்

(1) **போர் வாட்கள் :** ஆர்க்காடு நவாபுகள் தம்மை நிலை நிறுத்திக் கொள்வதற்காகப் பல போர்களில் ஈடுபடவேண்டிய தாயிற்று. போர் என்பது இவர்கள் ஆட்சியின் இன்றியமையாத அம்சமாகிவிட்டது. இவர்கள் நீளமான போர் வாட்களை "தூப்" என அழைத்தனர். இக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பலவகையான போர்வாட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

(2) **பிச்சுவா :** இது நீண்டு வளைந்து இலை வடிவில் உடல் பகுதியும், உருண்டை வடிவில் மரத்தாலான பிடியும், இடையில் வட்ட வடிவமான இரும்புத் தடையும் கொண்டு காணப்படுகிறது. நுனி குறுகியும், அடி அகன்றும், பிச்சுவாக்களுக்குரிய பாணியில் இருபுறமும் கருக்கு தீட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழ்ந்த இசுலாமிய மக்களும், பிறரும் தற்காப்புக்காக வழக்கமாகப் பயன் படுத்தும் ஆயுதம் இது. பொதுவாக இதை இடுப்பிலோ, இடுப்பில் உள்ள இடை வாரிலோ செருகி வைத்திருப்பார்கள். இசுலாமியர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தபோது அவர்களால் பயன்படுத்தப்பட்டதும், விட்டுச் சென்றதுமான ஆயுதங்களின் எச்சமாக இப்பிச்சுவா விளங்குகிறது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

(3) **வீச்சரிவாள் :** வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள கிராமியக் கோயில்களில் முனியன், முனியசாமி முன்பு நீண்ட வீச்சரிவாள்களை வேண்டுதலுக்காக அளிப்பது வழக்கம். அதனை நினைவுபடுத்தும் வகையில் இந்த நீண்ட வீச்சரிவாள் அமைந்துள்ளது. நுனி அகன்றும் பிடி சிறுத்தும் உள்ள இந்த வீச்சரிவாள் இரும்பால் அடித்து உருவாக்கப்பட்டுள்ளது. வேண்டுதலுக்காக அளித்ததால் அரிவாள் சாணை தீட்டப்படவில்லை. மரத்தாலான கைப்பிடி ஒன்று செருகப்பட்டுள்ளது. இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டினதாகும்.

(4) **மடக்கு உருளைக்கத்தி :** இக்கத்தி மடக்கி வைத்த நிலையில் 12 செ.மீ. நீளமும், பிரித்து வைத்த நிலையில் 22 செ.மீ. நீளமும் கொண்டுள்ளது. சுமார் 10 செ.மீ. அளவிற்கு உள்ள இரும்பாலான உருளையின் முனை கூர் செய்யப்பட்டுள்ளது. இதன் பிடியின் இரு பக்கமும் சிறு மரக்கட்டைகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாயுதத்தை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இப்பகுதி மக்கள் தற்காப்புக்காகப் பயன்படுத்தியுள்ளார்கள்.

(5) **முள்வாங்கி :** முற்காலத்தில் கிராமப்புறங்களில் வயல்களில் வேளாண் தொழில் செய்யும்போதும், காடுகளில் மரம் வெட்டுதல், தழை பறித்தல் போன்ற பணிகள் செய்யும்போதும், கால்களில் காலணிகள் அணியாத நேரத்தில் முள் குத்திவிடும். அத்தகைய சமயங்களில் உடனடியாகக் கால்களில் குத்தும் முட்களைப் பிடுங்கி எறிவதற்கு 'முள்வாங்கி' அல்லது 'முள் பிடுங்கி' என்னும் இவ்வாயுதத்தினை வைத்திருப்பார்கள். இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டினது ஆகும்.

(6) **வெற்றிலை பறிக்கும் நக ஆயுதம் :** வெற்றிலைத் தோட்டங்களில் வெற்றிலை பறிப்பதற்காக வலது கைக் கட்டை விரலின் நுனியில் அணியும் ஆயுதம் இது. இதன் மூலம் மிக எளிமையாகவும், வேகமாகவும் வெற்றிலைகளைப் பறிக்கலாம். தற்போதும் இது போன்ற நக ஆயுதம் 'எவர் சில்வர்' போன்ற உலோகங்களால் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டினதாகும்.

## இசுலாமியரின் பீங்கான் கலன்கள்

சீனர்கள்தான் முதலில் பீங்கான் கலன்கள் செய்யும் தொழிலை மேம்படுத்தினர். சீன அரசர்கள் இத்தொழிலுக்குப் பெரும் முக்கியத்துவம் அளித்ததுடன், பீங்கான் கலன்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'செலடான்' இன சீன நாட்டுப் பீங்கான் ஓடுகள் தமிழகத்தில் பெருமளவில் கிடைக்கின்றன. இசுலாமியர்களும் பீங்கான் கலன்களைத் தம் அன்றாட வாழ்வின் பல உபயோகங்களுக்குப் பெருமளவில் பயன்படுத்தினார்கள். இவர்கள் இக்கலன்களின் மீது மிக அழகான பூ வேலைப்பாடுகளையும், இயற்கைக் காட்சிகளையும் வரைந்து மெருகூட்டினார்கள். மிக மிருதுவான வெள்ளைக் களிமண்ணோடு "பெல்ட்ஸ்பர்" என்னும் ஒளியூட்டும் கற்பொடியினைக் கலந்து பீங்கான் கலயங்கள் செய்யப்பட்டன.

நவாபுகள் இத்தொழிலுக்குப் பெரும் ஆதரவு அளித்தனர். இவர்கள் காலத்தில் செய்யப்பட்ட "Arcot Porcelain" என அழைக்கப்படும் பீங்கான் கலன்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாகும். இக்கலன்களின் உட்புற அடிப்பாகத்தில் பாரசீக எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கும். வேலூருக்கு அருகிலுள்ள கரிகிரி என்னும் ஊரிலிருக்கும் திரு. வெங்கடேசன் என்பவரின் முன்னோர்கள் ஆர்க்காடு நவாபுகளிடம் மான்யம் பெற்றுக்கொண்டு இத்தகைய கலன்கள் செய்யும் தொழிலை மேற்கொண்டிருந்தனர். தற்போதும் திரு. வெங்கடேசன் இசுலாமியர் கலைப்பாணியிலான பூச்சாடிகள் போன்ற கலன்களைச் செய்துவருகிறார்.

நெல்லை மாவட்டம் காயல்பட்டினம், தஞ்சை மாவட்டம் சம்போடை ஆகிய இடங்களிலிருந்து சேகரித்துவரப்பட்ட இசுலாமியர் கால பீங்கான் கலன்களும், ஆர்க்காடு கோட்டை மேட்டுப் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்ட பீங்கான் ஓடுகளும் ஆர்க்காடு அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் கி.பி. 17–19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

## காசுகள்

ஆர்க்காடு அருங்காட்சியகத்தில் நவாபுகள் தனியாகவும் பின்னர் ஆங்கிலேயர்களுடன் இணைந்தும் வெளியிட்ட தங்கக் காசுகளும், வெள்ளி ரூபாய்களும், செப்பு ரூபாய்களும், திப்பு சுல்தானின் செப்புக்

காசுகளும், ஐதராபாத் நிஜாம்-உல்-முல்கின் நிக்கல் காசுகளும், காசுகள் சேமித்து வைக்கப் பயன்படும் செப்பாலான காசுக் கலன்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் குறித்த வரலாற்றை 'இசுலாமியரின் காசுகள்' என்னும் அத்தியாயத்தில் விளக்கமாகக் காண்க.

மேலும், இங்கு காட்சிக்கு உள்ள மரத்தாலான 'காசு எண்ணும் பலகை' ஒன்று முக்கியமானதாகும். கோயில்களிலும், கருவூலங்களிலும் காசுகளைத் துரிதமாக எண்ணுவதற்கு இத்தகைய பலகைகள் பயன்படுத்தப்பட்டன. இப்பலகை கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டில் மிகச் சிறிய வடிவிலான காசுகளை எண்ணுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனுடைய இடது பக்கம் பாதியளவிற்கு ஒடிந்து போயுள்ளது. இதில் நீளவாக்கில் ஒரு வரிசைக்கு 25 காசுகளை வைக்கும் அளவிற்கு துளைகள் உள்ளன. அதேபோன்று அகல வாக்கில் 25 காசுகள் ஒரு வரிசைக்கு வைத்தால் ஒரே நேரத்தில் மொத்தம் 625 ( 25 x 25 ) காசுகளைச் சுலபமாக எண்ணிவிடலாம். இப்பலகை கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

## மதுப் புட்டிகள்

நவாபுகள் சிறந்த போர் வீரர்களாகத் திகழ்ந்தனர். ஆதலால் வீர விளையாட்டுகள் போர் வீரர்களின் விருப்பமான பொழுது போக்காக விளங்கின. இவர்கள் மது அருந்துவதிலும் பெருவிருப்பம் கொண்டிருந்தனர். ஆர்க்காடு, வேலூர், வந்தவாசி, கரிகிரி, மகிமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள நவாபுகள் காலக் கோட்டை மேடுகளில் மேற்கொண்ட கள ஆய்வில் மிகுதியாகக் கிடைக்கின்ற மதுப் புட்டிகளின் பகுதிகளே இதற்குச் சிறந்த சான்றாகும். இம்மதுப் புட்டிகளின் பல்வேறு பகுதிகள் இங்கு காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

## பிற தொல் பொருட்கள்

**(1) பீரங்கி குண்டுகள் :** சுமார் ஒன்பது செ.மீ. விட்டமுள்ள உறுதியான கருங்கல்லால் செய்யப்பட்ட பெரிய பந்து போன்ற பீரங்கி குண்டுகள் ஆர்க்காடு கோட்டைமேட்டிலிருந்து சேகரித்து வரப்பட்டு இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களால் அறிமுகம் செய்யப்பட்ட

பீரங்கிகளில் வைத்து பயன்படுத்தப்பட்டவையாகும். இப்பீரங்கிகள் கோட்டை அரண்களையும், கொத்தளங்களையும் தகர்க்கப் பயன் படுத்தப்பட்டன. பீரங்கி குண்டுகள் கருங்கற்களாலும், இரும்பாலும் செய்து பயன்படுத்தப்பட்டன.

(2) **சுண்ணக் குப்பி :** வெற்றிலைப் பாக்கு போடுவதற்கு உபயோகப்படும் சுண்ணாம்பு வைக்கக்கூடிய சிறிய சுண்ணக் குப்பி ஒன்று வேலூர் தொரப்பாடியிலிருந்து சேகரிக்கப்பட்டு, இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. செம்பினாலான இக்குப்பி மிக நுண்ணிய வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கிறது.

(3) **மருந்து அரைக்கும் கல்வம் :** நவாபுகள் காலத்தைச் சேர்ந்த கருங்கல்லால் செய்யப்பட்ட சிறிய கல்வங்கள் இரண்டு இங்கு காட்சிக்கு உள்ளன. இவை நாட்டு மருந்துகளும், மூலிகைகளும் அரைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டவைகளாகும். இக்கல்வங்கள் நீள்வட்டவடிவிலும், அறுகோண வடிவிலும் அமைந்துள்ளன.

(4) **எடைக்கல் :** இது பழங்காலத்தில் பொருட்களை நிறுத்து வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட எடைக்கல்லாகும். இது சரியாக ஐந்து செ.மீ. அளவுள்ள சதுரக் கல்லாகும். நல்ல உறுதியான கல்லால் செய்யப்பட்டு அனைத்துப் பக்கங்களும் வழுவழுப்பாக்கப்பட்டுள்ளன.

மேலும் தொடர்ந்து பல அரிய தொல் பொருட்களை சேகரித்து இவ்வருங்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

---

# இணைப்புச் செய்திகள்

## இணைப்புச் செய்திகள்

### நவாபுகள் காலத்தில் வாழ்ந்த சில முக்கியமானவர்கள்

| | | |
|---|---|---|
| 1 | அப்துல் வகாப்கான் | —நெல்லூர் கில்லேதார். |
| 2 | அப்துல்லாகான் | —வேலூர் கில்லேதார். |
| 3 | அப்துல்லாதி கயரில்தீன்கான் | —நவாப் முகமதலியின் மருமகன். |
| 4 | பூதிபேகம் | —முகமதலியின் மூத்த மகள். |
| 5 | புத்து சாஹித் | —புகழ்வாய்ந்த சேக். |
| 6 | ஹக்கீம் அகமது அல்லாகான் | —சிறந்த மருத்துவர். |
| 7 | மீர் இஸ்மாயில்கான் அப்ஜதி | —நவாப் அன்வருதீன்கான் வரலாற்றை "அன்வர்-நாமா" என்னும் பெயரில் எழுதியவர். |
| 8 | மீர் குர்ஷித் ஹசன் முகாவி | —சிறந்த பாரசீக ஆசிரியர். |
| 9 | மீர்கா அலி பக்த் அஸ்பாரி | —சிறந்த உருது ஆசிரியர். |
| 10 | மௌலானா அப்துல் அலிபஹார் அலூலும் | —சிறந்த உருது கவிஞர் "மதரஸா-ஐ-கலம்" என்னும் பதவியில் சென்னையில் இருந்தவர். |
| 11 | மௌலானா அலாலாதீன் | —சிறந்த அறிஞர். |
| 12 | முகமது மாபூஸ்கான் பகதூர் | —திருச்சியின் சுபேதார். |
| 13 | நசீப்கான் | —நவாப் முகமதலியின் குடும்ப நண்பர். |
| 14 | நாமி | —சிறந்த உருது அறிஞர். |
| 15 | காதிர் நவாஸ்கான் | —வாலாஜாவின் அரசு அதிகாரி. |
| 16 | ரைஸ் அலுமாரா | —வாலாஜாவின் மூத்த மகளின் மகன். |
| 17 | சேக் முகமது சாவி | —சிறந்த அறிஞர். இசுலாமியர்களாலும், இந்துக்களாலும் பெரிதும் மதிக்கப்பெற்றவர். |
| 18 | தாஹி அலிகான் பகதூர் | —நவாப் உம்-தத்-உல்-உமராவின் இராணுவ அதிகாரி. |
| 19 | வெங்கடகிருஷ்ணமாச்சாரி | —"அன்வர்-நாமா"வை தெலுங்கில் மொழிபெயர்த்தவர். |
| 20 | கிருஷ்ணசாமி | —நவாப் வாலாஜாவின் முக்கிய அரசு அதிகாரி. |
| 21 | ராஜா பெரியார் பகதூர் | —ஆர்க்காட்டின் வரிக் குத்தகை உரிமையாளர். |
| 22 | சுலைமான்கான் | —பறங்கிப்பேட்டையின் கில்லேதார். |

23 கிருஷ்ணசந்த் —நவாப் வாலாஜாவின் "முன்சி".
24 குலாம் முகமது —ஆர்க்காட்டின் வக்கீல்.
25 ராஜா மக்கன்லால் —நவாப் வாலாஜாவின் அந்தரங்க செயலாளர்.
26 பிட்ஸ் சால்டு —நவாப் உம் - தத் - உல் - உமரா வின் டாக்டர்.
27 மேக் நெயில் —சேப்பாக்கம் நவாபுகளின் அரண் மனையின் காவல் அதிகாரி.
28 ஸ்மித் கேப்டன் —நவாப் வாலாஜாவின் முக்கிய ஆலோசகர்.
29 ராய் ரெட்டி ராவ் —உம்-தத்-உல்-உமராவின் நீதிமன்ற சிரஸ்தார்.
30 வெப் ஜோசய்யா —கருநாடகத்தை நவாபுகளிட மிருந்து ஆங்கிலேயர் பெறும் போது அமைக்கப்பட்ட குழு வின் முக்கிய உறுப்பினர்.

## நவாபுகள் காலத்தில் சிறப்புற்றிருந்த இடங்கள்

1 பாக்-ஐ-கான்ா —சென்னை ஸ்பென்ஸர்ஸ் பகுதியில் உள்ள ஒரு கட்டடம்.
2 அமீர் பாக் —சென்னை ஸ்பென்ஸர்ஸ் பகுதியில் உள்ள ஒரு மாளிகை.
3 கலாஸ் மஹால் —சேப்பாக்கம் அரண்மனையின் தெற்குப் பகுதி.
4 ஹுமாயுன் மஹால் —சேப்பாக்கம் அரண்மனையின் வடக்குப் பகுதி.
5 பறங்கிகுண்டா —பறங்கிமலை.
6 கரம்பாக் —கோடம்பாக்கம்.
7 காமன் தர்வாசா —சென்னைத் திருவல்லிக்கேணி காமன் தெரு.
8 பாரா-தாரி —கோடை இல்லம்.
9 பலி மாதவரம் —மாதவரம்.
10 நத்தர் நகர் —திருச்சி.
11 முகமதுபூர் —ஆர்க்காட்டின் பெயர்.
12 தர்-அல்னூர் —ஆர்க்காட்டின் பெயர்.
13 தோப்கான்ா —ஆர்க்காட்டில் பீரங்கிகள் வைக்கும் இடம்.

| | | |
|---|---|---|
| 14 | ஆலம்பானா கோட்டை | —ஆர்க்காட்டில் இருந்த கோட்டையின் பெயர். |
| 15 | நவாப் ஏரி | —ஆர்க்காட்டில் உள்ள ஏரி. |
| 16 | கும்மடம் | —ஆர்க்காட்டில் உள்ள இசுலாமியர் இடுகாடு. |
| 17 | திவான் பஜார் | —ஆர்க்காட்டில் இருந்த பஜார்கள். |
| 18 | மும்தாஜ் பஜார் | |
| 19 | தண்டு பஜார் | |
| 20 | சாகன்சி பஜார் | |
| 21 | கிளைவ் பஜார் | |

## நவாபுகள் கால நிர்வாக அலுவலர்களும், பணியாளர்களும்

| | | |
|---|---|---|
| 1 | சுபேதார் | —மாநிலத் தலைவர். |
| 2 | திவான் | —மாநிலத் தலைமை நிர்வாகி. |
| 3 | வசிர் | —திவானுக்கு அடுத்த நிலையில் உள்ளவர். |
| 4 | கில்லேதார் | —மாவட்ட ஆட்சியாளர். |
| 5 | ஜாகிர்தார் | —வட்ட ஆட்சியாளர். |
| 6 | அமல்தார் | —மாவட்ட நிர்வாகி. |
| 7 | பௌசுதார் | —சிறிய படைத் தலைவர். |
| 8 | அமானி | —துணை வட்டாட்சியர். |
| 9 | சிரஸ்தார் | —நீதிமன்ற அலுவலர். |
| 10 | பக்ஷி | —படைத்துறை கணக்காளர். |
| 11 | கொத்வால் | —காவல்துறை அதிகாரி. |
| 12 | காஜி | —நீதிபதி. |
| 13 | போட்தர் | —மாவட்ட பொருளாளர். |
| 14 | வாக்-இ-நிவாஸ் | —செய்தி நிருபர். |
| 15 | கான்சமான் | —கண்காணிப்பாளர். |
| 16 | மிரத்தியான் | —அரசவைப் பெண் பாடகி. |
| 17 | பாளையக்காரர் | —சிறு பகுதித் தலைவர். |
| 18 | அர்த்லேகி | —நவாபுகளுக்கு பொது மக்களிடமிருந்து வரும் மனுக்களை சமர்ப்பிப்பவர். |
| 19 | அதலிக் | —கல்வி மேற்பார்வையாளர். |
| 20 | பண்டர் | —வில்லாளர். |
| 21 | போகி | —பல்லக்குத் தூக்கி. |
| 22 | சவுக்கிதார் | —காவலர். |

## நவாபுகள் காலத்தில் வழக்கிலிருந்த சில சுவையான சொல் வழக்குகள்

1 பாஹல் —பெண் ஒட்டகம்.
2 அல் கோஷா —புல்லாங்குழல்.
3 பாஹா —ஒரு வீர விளையாட்டு.
4 பிஷோபா —தாங்கு கம்புகள் இல்லாத கூடாரம்.
5 சட்டகார் —ஆங்கிலோ இந்தியர்.
6 ஹஜுலால் —பாச உணர்வு.
7 கைலான் —மைத்துனி.
8 மஞ்சா —திருமணத்திற்கு முன்பு இசுலாமிய மண மக்களுக்கு நடத்தும் அலங்காரச் சடங்கு.
9 கஸ்பா —நிர்வாக அலுவலகம்.
10 பர்க்கானா-பிர்கா —வருவாய் வட்டம்.
11 கிஸ்தி —வரி.
12 பேஸ் கிஸ்தி —நிலவரி.
13 கால்சா —அரசு நிலங்கள்.
14 கச்சேரி —அரசு அலுவலகம்.
15 கர்க் —நிலவரி.

## நவாபுகள் கால விலையுயர் அணிகளும், பிற பொருட்களும்

1 பண்டி .. கொலுசு.
2 சந்த்-சிஸ்பல் ...பெண்கள் முன்தலையில் அணியும் ஓர் அணி.
3 லஹ்ஹா ...கழுத்தணி.
4 மைய்கட் ...கழுத்தணி.
5 நாத் ...மூக்கு வளையம்.
6 சார் பாஹ் .. தலைப்பாகையின் முன்புறம் அணியும் அணி.
7 ஜிமிக்கி ...காதில் தொங்கும் அணி.
8 பங்கடி ...வளையல்.
9 அங்கோட்டி ...மோதிரம்.
10 தன்-கே-கடா ...மேற்கை அணி.
11 லாகடி .. அலங்கார தலையணி.
12 துஷ்ஷாலா ...ஒரு ஜோடி விலையுயர் போர்வை.

| | | |
|---|---|---|
| 13 | ஹன் | .. பகோடா எனப்படும் தங்கக் காசு. |
| 14 | கல்கி | ...விலையுயர்ந்த கற்கள் பதித்த பிறை. தலைப் பாகையில் முன்புறம் பதிக்கக்கூடியது. |
| 15 | கிலாத் | ...அதிகாரிகளுக்குச் சிறந்த அரச சேவைக்காக நவாபுகளால் அணிவித்து கௌரவிக்கப்படும் மேலங்கி. |
| 16 | மண்டிலாஹ் | ...துவாலை. |
| 17 | சவுக்கதா | ...நான்கு குதிரைகள் பூட்டிய அலங்கார வண்டி. |
| 18 | சாரட் | ...இரதம். |
| 19 | நல்கி | ...அலங்காரப் பல்லக்கு. |
| 20 | சுக்சவான் | ...மற்றொரு வகை அலங்காரப் பல்லக்கு. |
| 21 | டவ்ராஹ் | ...குவளைகள் வைக்கும் தட்டு. |

## மதுரை சுல்தான்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஜலாலுதீன் | ...கி.பி. | 1335-1340 |
| 2 | அலாவுதீன் உடௌகி | ... ,, | 1340-1341 |
| 3 | குத்புதீன் பிரோஷா | ... ,, | 1341 (40 நாள்கள் மட்டும்) |
| 4 | கியாசுதீன் தாமகன் ஷா | ... ,, | 1341-1343 |
| 5 | நஸிருதீன் | ... ,, | 1343-1353 |
| 6 | குர்பத் ஹாசன் கங்கு | ... ,, | 1353-1356 |
| 7 | அடில் ஷா | ... ,, | 1356-1359 |
| 8 | பக்ருதீன் முபாரக் | ... ,, | 1359-1371 |
| 9 | அல்லாவுதீன் சிக்கந்தர் ஷா | ... ,, | 1371-1378 |

## ஆர்க்காட்டு இளவரசர்கள்


| | | | |
|---|---|---|---|
| 1 | அசீம் ஜா | ...கி.பி. | 1870-1874 |
| 2 | ஜாகீர் உத்தீன் | ... ,, | 1874-1879 |
| 3 | அகமதுல்லா | ... ,, | 1879-1884 |
| 4 | முகமது முன்வர் | ... ,, | 1884-1903 |
| 5 | குலாம் முகமதலி | ... ,, | 1903-1952 |
| 6 | குலாம் மொய்தீன்கான் | ... ,, | 1952-1969 |
| 7 | ஜி. எம். அப்துல் காதிர் | ... ,, | 1969 முதல் ஆர்க்காட்டு இளவரசராக உள்ளார். |

## ஆர்க்காட்டு நவாபுகள்

- சுல்பிகர்கான் *(கி.பி. 1690-1703)*
  - தாவூத்கான் *(கி.பி. 1703-1710)*
    - (நவாயத் குடும்பம்)
      - குலாம் அலி
        - தோஸ்த் அலிகான் *(கி.பி. 1732-1740)*
          - சப்தர் அலிகான் *(கி.பி. 1740-1742)*
            - முகமது சையது *(கி.பி. 1742-1744)*
        - முகமது பக்கீர்
          - சந்தா சாகிப்
      - சாதத்துல்லாகான் *(கி.பி. 1710-1732)*
- (வாலாஜாஹி குடும்பம்)
  - அன்வருதீன்கான் *(கி.பி. 1744-1749)*
    - மாபூஸ்கான்
    - முகமதலி (வாலாஜா I) *(கி.பி. 1749-1795)*
      - உம்-தத்-உல்-உமரா (வாலாஜா II) *(கி.பி. 1795-1801)*
        - அலி உசேன்
      - அமீர்-உல்-உமரா
        - அசிம்-உத்-தௌலா (வாலாஜா III) *(கி.பி. 1801-1819)*
          - அஜம் ஜா (வாலாஜா IV) *(கி.பி. 1819-1825)*
            - குலாம் கௌஸ்கான் (வாலாஜா V) *(கி.பி. 1825-1855)*
          - அசிம் ஜா (குலாம் கௌஸ்கானின் ரீஜெண்ட்) *(கி.பி. 1825-1842)*



நவாப் முகமதலி வாலாஜா
( கி.பி. 1749 - 1795 )



சந்தா சாகிப்



6. Nawab Umdat-ul-Omrah

நவாப் உம்-தத்-உல்-உமரா
( கி.பி. 1795 - 1801 )



நவாப் அமீர்-உல்-உமரா




நவாப் சாதத்துல்லாகான் கல்லறை,
பச்சைக்கல் மசூதி, ஆர்க்காடு.




நவாபுகளின் கோட்டைப் பகுதி, கரிகிரி.





அப்துல் மஹால் அப்துல்லாபுரம், வேலூர்.



கி.பி. எட்டாம் நூற்றாண்டு அரபிக் கல்வெட்டு, கல்லுப்பள்ளி, திருச்சி.



தில்லிவாயில், ஆர்க்காடு.

## உதவிய நூல்கள்


1 ஆர்க்காடு—திரு. ஔவை துரைசாமிப் பிள்ளை.

2 தமிழக முகமதியர் வரலாறு—திரு. நா. முகமது செரீப்.

3 North Arcot District Gazetteer—Mr. Arthur F. Cox.

4 Political History of Carnatic under the Nawabs—Mr. N. S. Ramaswami.

5 இஸ்லாமும் தமிழும்—திரு. மு. அப்துல் கரீம்.

6 தென்னாட்டுப் போர்க்களங்கள்—திரு. கா. அப்பாத்துரை.

7 கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்
—Ed. திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர்.

8 ஆர்க்காடு நகரின் காலம் (கட்டுரை)—திரு. மா. கலைவாணன்.

9 A.R.E.—1976-77.

10 Ruqaat-I-Walajahi—Ed. Mr. T. Chandrasekaran.


★